ஸ்ரீ

பிரதாப சிம்மன்

[துரைத்தனத்தார் அங்கீகரித்தது]

'ஜயம் கம்பனியார்

நுங்கம்பாக்கம், சென்னை :: வளவனூர், தென்னாற்காடு

பதிவு செய்தது] [விலை அணா 9

T. 11623

முன்னுரை

மனவலியே எவ்வகை வலியினும் சிறந்தது. அவ்வலி கொண்டு முயலின், எதனையும் சாதிக்க இயலும். ஆள்வினை கொண்டு முயலுகையில், முதலில் துன்பம் நேரினும், முடிவில் இன்பமே பயக்கும். ஆள்வினையும் ஆன்ற அறிவுங்கொண்டு முயலாநிற்பின், குடியும் குலமும் நாடும் நலமும் ஓங்கி உயர்தல் திண்ணம். அங்ஙனம் முயன்று மொய்புகழ் கொண்டோன் பிரதாப சிம்மன் ஆவான். அவ்வேந்தன் சரிதையில், ஆள்வினை யுடைமை, விடா முயற்சி, குலாபிமானம், தேசபக்தி, ராஜபக்தி, சமயப்பற்று, வீர தீரம் முதலிய அருங்குணங்கள் விளங்காநிற்கும். இந்நூலைப் படிக்கும் மாணவருக்கு அக் குணநலங்கள் வளரும் என்பது நமது உறுதி.

ஜயம் கம்பனியார்

நூலடக்கம்

		பக்கம்
1.	குலச் சிறப்பு	5
2.	மேவாரின் மேன்மை	11
3	சித்தூரின் வீழ்ச்சி	14
4.	பிரதாபனது சிந்தாகுலம்	18
5.	மொகலாயரின் மாயவலை	26
6.	அக்பரின் படையெழுச்சி	34
7.	சகோதர வாஞ்சை	43
8.	உயிர்ப் பிச்சை	49
9	பத்தும் பறக்கும்	52
10.	பிருதிவியின் பெருவாசகம் ...	61
11.	மேவாரின் மீட்சி	67
12.	பிரதாபனது கடைநாள்	70

பிரதாப சிம்மன்

ஸ்ரீ

பிரதாப சிம்மன்

1. குலச் சிறப்பு

மாந்தர்க்கு வாழ்வும் தாழ்வும் வந்தேய்தல் இயற்கை. அங்ஙனமே ஒரு தேசத்தினுக்கும் வாழ்வு தாழ்வுகள் மாறிமாறி வரும். பாரெங்கும் புகழ்பரப்பிய நம் பாரதபூமி ஏழாம் நூற்றுண்டிலே சீரும் சிறப்புமின்றி நலிந்திருந்தது. வல்லரசாக விளங்கிய பல வமிசங்கள் வீழ்ச்சியுறவே, தடியெடுத்தவனெல்லாம் தண்டல்காரன் என்பதுபோல், தேச மக்களிலே பதரான சிற்சிலர் சுயநலமேகொண்டு நெறிமுறை விடுத்து நாடெங்கும் திரியாநின்றனர். ஆதலினுல் வடக்கே இமயம் முதல் தெற்கே கன்னியாகுமரி வரையில் எங்கும் அராஜகக் கொந்தளிப்பே பரந்திருந்தது.

அங்ஙனம் இந்தியா தேசம் அவதியுற்றுக் கிடந்த காலத்திலே, புதிதாகத் தோன்றிய இஸ்லாம் சமயத்தில் ஈடுபட்ட அரேபியர் மதப்பற்றும் மண்ணுசையுங்கொண்டு பல திசைகளிலும் பரவலாயினர். மேற்கேயுள்ள ஐரோப்பாக் கண்டத்தில் சிலர் புகுந்து, பிரான்சு, ஸ்பெயின் முதலிய தேசங்களே வாட்டி வதைத்தனர். அன்னவரின் படை வெள்ளமொன்று கிழக்கு நோக்கிப் புறப்பட்டு,

நம் தேசத்திலே ஸிந்துமா நதியைக்கடந்து, சிந்து தேசத்தைப் பற்றிக்கொண்டு சீறி நின்றது.

அந்நாளில் தேசத்தையும் தேவையும் தர்மத்தையும் மதத்தையும் காக்கக்கருதிய வீரதிலகங்களைக் கொண்ட க்ஷத்திரிய குலங்கள் தலையெடுக்கத் தலைப்பட்டன. அக்குலமக்கள் மேற்கண்ட படை வெள்ளத்தை மறித்துப் புரட்டி யெறிந்தது மல்லாமல், இத்தேசத்திலே அரசு கொள்ளக் கருதிய அரேபியர், துருக்கர், பட்டாணியர் முதலியோருடன் எண்ணூறாண்டு அருஞ்சமரும் ஆற்றி வந்தார்கள். அக்குலத்தினரே இராஜபுத்திரர் எனப் படுவர்.

இராஜபுத்திர மக்கள், சூரிய, சந்திர வமிசத்தைச் சேர்ந்த தொன்மையான அரச பரம்பரையினர் ஆவர். அவர்கள் வசித்துவரும் ஸ்தலம் இராஜபுதனம் என வழங்கும். அக்குலத் தலைவர்கள் அன்றுமுதல் இன்றளவும் ஏறக்குறைய ஓர் ஆயிரம் ஆண்டு வாழையடி வாழையாய் முடிவேந்தராக வட இந்தியாவில் விளங்கி வருகிறார்கள். தற்சமயம் உலகிலுள்ள எந்த இராஜ வமிசமும் இராஜபுத்திரரைப்போல் அத்துணை இடைவிடாப் பழமையும் பெருமையும் இராஜ வாழ்வும் பொருந்தி யிருக்கவில்லையென்று திட்டமாகச் சொல்லலாம். இந்த ஒரு காரணத்தைக்கொண்டே, நமது தேச சரித்திரத்தில் இராஜபுத்திரரை முன்வைத் தெண்ணல் வேண்டும். அவ்வீர மக்களின் இணையிலாப் பெருமை இத்துணை தானே?

வில்லுக்கு விஜயன், விறலுக்கு வீமன் என்பர் பெரியோர். வீரதீரத்தினுக்கு உறைவிடமாக இராஜபுத்திர மக்களையே ஏற்றமுடன் சாற்றல் வேண்டும். நட்பும் தயையும் கொடையும் பிறவிக் குணமே என்றனள்

ஔவைப் பிராட்டி. உயர் வீரதீரமோ இராஜபுத்திரருக்கு இயற்கைக் குணவிசேஷமாம். இஸ்லாம் மார்க்கத்தினரான அரேபியர், துருக்கர், ஆப்கானியர், பட்டாணியர் முதலியோர் இத்தேசத்தில் காலடி வைத்து முதலில் கொள்ளையும் கொலையும் நடத்திவந்த காலத்தும், பின்னர் அரசுரிமை பூண முயன்ற காலத்தும், ஈடிலா வீரதீரமும் அளவிலா ஆற்றலும் காட்டி நின்றோர் இராஜபுத்திரரே ஆவர். அந்நாள் தொடங்கி இராஜபுத்திரர் வீரம் விளைத்த விவரத்தைக் கூர்ந்து நோக்கின், இந்து தேச சரித்திரத்தில் மட்டுமன்றி உலக சரித்திரத்திலும் அன்னவருக்கு நிகரான வெற்றி வீரர் இலரென்பது தெற்றெனப் புலப்படும்.

மக்கட்செல்வம் பெற விரும்பாதார் யாவர்? இராஜபுத்திர வீரரோ ஆண்மகன் பிறக்கவேண்டுமென்று தவம் கிடப்பர். குறுநடை கொள்ளத் தொடங்கியதும் இளங்குமரரை இராஜபுத்திரர் தம் குதிரையின்மீது ஏற்றிவைத்துச் சீராட்டிப் பழக்கி வருவர்; பட்டாக் கத்தியை ஏந்தும் பருவமிலா வயதில், குழந்தைகளிடம் சிறியவாள் கொடுத்துப் பயிற்சி ஊட்டுவர். அந்திய காலத்திலே அப்பெரு மக்கள் தமது பாய்மாவையும் பட்டாக்கத்தியையுமே அரும்பொருளாகத் தம் மைந்தருக்கு அளித்து ஆசீர்வதித்தல் வழக்கம்.

பிள்ளைப்பிராய முதல் குதிரை ஏற்றத்திலும் வாட்போரிலும் அரும் பயிற்சி பெறுவோர், தம் ஆருயிர் போமளவும் ஆண்மையுடன் விளங்கி நிற்க விரும்பி முயலுதல் இயற்கை அல்லவா? (தொட்டில் பழக்கம் சுடுகாடுமட்டில்) என்பது பழமொழி. தனது வால்கற்றையின் மயிர் ஒன்றை இழப்பினும், அப்பால் கவரிமான் உயிர்வாழ ஒருப்படாது. அங்ஙனமே மானம் படவரின்,

இராஜபுத்திரர் தம் இன்னுயிரையும் பொருட்படுத்தார்; உடைவாள் கொண்டு உருமிக் கிளம்பிச் சமரில் புகுந்து வாகைசூட முயலுவர். வெற்றி மாலை கிட்டாதாயின், விழுமிய வீரசுவர்க்கம் புகுந்து களிக்க அவர் சிறிதும் தயங்கார். படை முகத்தில் புறங்கொடுத்தல் என்பதை அன்னார் ஒருநாளும் அறியார்.

படைமுகத்தும் பகைவனிடத்தும் பெருந்தன்மை காட்டுதல் இராஜபுத்திரரின் குணவிசேஷங்களில் சிறந்ததாகும். முன்னம் மாளவத்தின் மன்னவனான முகம்மது என்பான் மதவெறி கொண்டு மண்டமர் புரிந்தும் இராஜ புத்திர வேந்தர் திலகமான மகாராணா சங்கரசிம்மனிடம் ஒருசமயம் தோல்வியுண்டு சிறைபட்டனன். சங்கரசிம்மனே அவ்வேந்தனை ஏற்றமுடன் வரவேற்று, இனிய புத்திமதி புகன்று, யாதோர் இடையூறுமின்றி மீண்டும் மாளவத்துக்கு அனுப்பி வைத்தான். மொகலாய சக்கரவர்த்தியான அவுரங்கசீப் எண்ணிறந்த படைகளுடன் சென்று ஒருசமயம் இராஜபுத்திரரிடம் சமர் செய்தனன். அப்போரைக் காணச்சென்ற பாதுஷாவின் பிரியமகிஷி வழிதவறிப் பகைவரிடம் சிக்கிக்கொண்டாள். ராணா இராஜ சிம்மன் அவ்வரசியைத் தன் சகோதரியேபோல் பாவித்து, ஏற்ற காவலுடன் அவுரங்கசீபினிடம் அனுப்பி வைத்தான்.

குலத் தலைவனுக்குக் குற்றேவல் புரிதலும், தேசாதிபதியிடம் பக்தி விசுவாசம் காட்டுதலும், இராஜபுத்திரரின் இயற்கை நலங்களாம். அக்குணநலங்களை நிலைநாட்ட நேருங்காலத்தில், தமது உடல் பொருள் ஆவி மூன்றையும் ஒருங்கேவழங்கி உயர்வுபெற அக்குலமக்கள் ஒருசிறிதும் பின்வாங்கார். (அவனி காவலனே கண்கண்ட தெய்வம்போல்வான்) என்பது அவர்தம் கொள்கை. அரசனைக்

காக்கவேண்டி ஆயிரக்கணக்கில் இராஜபுத்திர வீரர் ஆவி விடுத்த அற்புதமான விவரத்தை இச்சரிதத்தில் நன்கு காணலாம்.

தாம் ஏறிச்செல்லும் பரிமாவும், உரை உருவி வீசும் உடைவாளும் இராஜபுத்திரருக்கு உயிரினும் சிறந்தவையாதலின், அவ்விரண்டையும் அன்னார் என்றுங் கைவிடார். கானவேட்டையில் அவர்களுக்கு விருப்பம் அதிகம். முள்ளம்பன்றியைக் கண்டுவிடின் அவ்வீரர் அளவிலா ஆனந்தம் அடைந்து, அதனை வேல்கம்புகொண்டுமாய்க்க முனைந்து நிற்பர். பன்றி வேட்டை பேராபத்துக்கு இடமாயினும், அஃது அவர்களுக்கு ஒரு விளையாட்டாகவே யிருக்கும்.

முகர்ந்தவளவில் அனிச்சமலர் வாடி வதங்கிப்போம். அதுவேபோல் இம்மியளவேனும் பிறர் தீங்கிழைப்பின், அக்கணமே வெகுண்டெழுந்து பழிவாங்கிப் பகைமுடித்தல் இராஜபுத்திரரின் பான்மையாம். பழிவாங்கும் காலத்தில், இன்னார் இனியார் என்பதை அன்னவர் எண்ணிப் பாரார். பழிவாங்கிப் பகைமுடித்த பின்பே பிற கருமங்களில் அவர்களுக்கு நாட்டம் செல்லும். பழிவாங்கப் புகுங்காலத்திலே, பகைஞன் தன் மகளை மனைவியாகத் தர மனமொப்புவனேல், அக்கணமே இராஜபுத்திரம் வர்மம் விடுத்து நேசங் கொள்ளுதலும் உண்டு.

மரபின் மானத்தையும், மக்களின் நலத்தையும், தேசத்தின் சுதந்தரத்தையும் கருதி இராஜபுத்திர வேந்தரும் வீரரும் ஆற்றிய சமர்கள் எண்ணிலடங்கா; விளைத்த வீர விவரங்களோ ஏட்டில் எழுத முடியா. பகைவன் கைமேலாகி வாகைமாலை சூடிவிடுவான் எனக் காணின், இராஜபுத்திரர் தம் மனைவி மக்களை வாளுக்கு இரையாக்கிவிட்டு, அறையில் மஞ்சள் உடைதரித்து,

மாற்ருன்மீது கோளரிபோல் பாய்ந்து, ஆவிபோமளவும் அருஞ்சமர் ஆற்றி வீரசுவர்க்கம் புகுவர். சுருங்கச் சொல்லின், வீரச் சுவையும் இராஜ விசுவாசமும் சுதந்தர உணர்ச்சியுமே இராஜபுத்திரரின் சரித்திரத்தில் ததும்பி நிற்கும்.

இராஜபுத்திர ஆடவர்மட்டுமன்று, பெண்டிரும் வீரத்தின் பிறப்பிடமாவர். அவசியம் நேர்ந்த காலத்தில் ஆண்வேடந் தாங்கிப் போர்க்கோலம் பூண்டு ஆடவருடன் இரணகளஞ் சென்று அளவிலா ஆற்றல் காட்ட ராஜபுத்திர மாதர் முனைந்து நிற்பர். காந்தனுயினும் குமரனுயினும் கோழைத்தனம் கொள்ளின், அவனை அம்மங்கையர் கண்ணெடுத்தும் பாரார்; போர்முனையில் முதுகு காட்டி வரும் புருஷரை அம்மாதர் புறக்கணித்துவிடுவர். கற்பென்பது அம்மாதர்மணிகளின் அரிய அணிகலனுகும்.

நாதன் காலகதி ஆயின், அவனுடன் தீயில் குளித்து ஆவி துறத்தல் அக்குலமாதரின் கோட்பாடாகும். குலவீரரை வேற்றரசன் புறங்கண்டு நகரில் புகுமுன், மாதர் அனைவரும் மங்கள நன்னீராடி, நல்லாடை பூண்டு, அம்மை பவானியைத் துதித்து, நீரோடையில் ஆடச் செல்வதேபோல் ஒருவர்பின் ஒருவராக அக்கினி குண்டத்தில் குதிப்பர். தங்கள் மேனியை அன்னியர் நோக்கவும் கூடாது என்பதே அக்குலமாதரின் கொள்கை. மேவாரின் பழம்பதியாம் சித்தூர் நகரைப் பட்டாணியரின் பார்த்திபனுன அலாவுத்தீன் கைப்பற்றிய காலத்தில், அங்ஙனமே ஆயிரக்கணக்கான மாதர் பத்மினியை முன்னிட்டுக்கொண்டு தீயில் குளித்துத் தேகத்தை விடுத்தது உலகப்பிரசித்தம்.

எட்டாம் நூற்ருண்டு முதல் பன்னிரண்டாம் நூற்ருண்டுவரையில் இராஜபுத்திரரே வட இந்தியாவில் வீறு

கொண்டு ஆட்சிபுரிந்து வந்தனர். அப்பால் இத்தேசத்திலே முகம்மதியர் முடி மன்னராகத் திகழ்ந்த காலத்திலும், இராஜபுத்திரர் கறுக்கொண்டு கிளம்பாமல் வாளா கிடக்கவில்லை. அன்னவரின் வீரதீரத்தைக்கண்டு வியந்த முகம்மதிய மன்னவர் பலர், தமது மதிவன்மையினுல் சாம தான பேதம் எனும் உபாயங்களைக் கையாண்டு இராஜபுத்திரரை அணைத்துக்கொள்ளப் பெரிதும் முயன்றனர். இன்றேல், முகம்மதியவரசு இத்தேசத்திலே நிலைத்திருக்க இயன்றிராது.

இராஜபுதன நாடுகளில் பலவும் முகம்மதிய வரசுக்குத் தலைசாய்த்து நின்ற காலத்தும், மேவார் எனும் நாடோ முடிவுவரையில் மாற்ருனுக்குத் தலைவணங்காமல் வாளுருவி நின்றது. அது காரணமாகவே, அந்நாட்டு நரபதிகளில் பலரும் பேராண்மை படைத்த பெரும் புருஷர் என மதிக்கப்படலாயினர்.

---

2. மேவாரின் மேன்மை

மேவார் நாடு, மத்தியபதி எனவும் மேதஸ்பதி எனவும் சொல்லப்படும். தலைநகரின் பெயர் கொண்டு தற்சமயம் அதனை உதயபுரி என்று அழைக்கின்றனர். முன்னம் அந்நாட்டின் தலைநகராகச் சிறந்து விளங்கியது சித்தூரே. சரித்திரத்தில் பெருமை பெற்றதும் இந்நகர்தான். அந்நாட்டாருக்கு மகாராணு எனும் பட்டப் பெயர் உண்டு. ஏறக்குறைய ஓர் ஆயிரம் ஆண்டுகளாக அந்நாட்டிலே முடி மன்னர் தொடர்ச்சியாக ஆட்சி செலுத்தி வருகின்றனர். அந்நாட்டிலே சரித்திர

வாயிலாகச் சிறப்புற்ற முதலரசன் பூபசிம்மன் எனப்படுவான். பப்பசிம்மன் எனவும் அவனை அழைப்பர்.

பூபசிம்மன் எட்டாம் நூற்றுண்டின் துவக்கத்தில் அந்நாட்டரசனுகத் திகழ்ந்தவன். மதவெறியும் மண்ணுசையுமே கொண்டு பாரதபூமிக்குள் புகுந்த பகைவெள்ளத்தைத் தடுத்துநின்று வாகைசூடிய பெருமை அப்பூபசிம்மனையே சாரும். அரேபியரை அவன் புறங்கண்டிராது போயின், இத்தேசத்திலே அன்னவர் எளிதில் அரசு கொண்டிருப்பர். நாட்டின் நலத்தையும் சுதந்திரத்தையும் காக்கவேண்டும் என்றே அக்காவலன் கடும்போர் புரிந்தான். அவனுக்குப்பின் வந்த பார்த்திபரும் அவனைப்போலவே சுதந்திர உணர்ச்சியும் தேசபக்தியும் படைத்தோர் ஆவர். பூபசிம்மன் எனும் பெயரைக் கேட்டவளவில், இன்றும் ராஜபுத்திரர் பயபக்தி விசுவாசம் கொள்வர்.

பூபசிம்மனுக்குப்பின் பெருங்கீர்த்தி வாய்ந்த காவலன் **கோமான்** எனப்படுவான். மத்தியபதியின் மகிமையை நிலைநாட்டக் கருதி, அக்கோமான் ஆற்றிய சமர்கள் இருபத்துநான்காகும். ஒவ்வொரு போரிலும் அவன் பகைவரை வாட்டி வாகைசூடித் திரும்பியவன். (இராஜபுதன தேசத்திலே யாரேனும் அசாத்தியமான கருமமொன்று புரியின், "கோமான் வந்து கைகொடுப்பானே" என்று பலர் இன்றும் சொல்வதுண்டு.)

அக்கோமானுக்குப் பின்பு சமரசிம்மனே அரும்புகழ் படைத்த அரசன். முகம்மது கோரியை எதிர்த்து நின்ற பிருதிவி ராஜனது துணையரசரில் சமரசிம்மனே சாலச் சிறந்தவன். பதின்மூன்றும் நூற்றுண்டிலே பத்மினி என்னும் பெண்மணியைக் கண்ணுடியிலேனும் காண விரும்பிய பட்டாணியப் பார்த்திபனை அல்லா

வுத்தீன் என்பான் பெரும் படைகொண்டு சென்று மேவாரைச் சின்னபின்னம் செய்தானுபினும் அந்நாடும் நாட்டவரும் இயற்கைக் குணநலத்தை இழக்கவில்லை.

மேவார் மன்னவரில் மேன்மை பெற்ற மற்றொருவன் மகாராணு கும்பகர்ணன். அக்கும்பகர்ணன் அயலக முகம்மதிய வரசுகளை வாட்போரில் வென்று, வாகை மாலை சூடிய கீர்த்தியாளன். அவ்வெற்றிக் கறிகுறியாக அவன் கட்டுவித்த மண்டபத்தின் சின்னங்களை இன்றும் சித்தூரில் காணலாம்.

மொகலாய மரபிலுதித்த பாபர் இத்தேசத்திலே புகுந்த காலையில், மத்தியபதியைப் பரிபாலித்து வந்த சங்கரசிம்மன் மொகலாயருடன் நெடுங்காலம் போர் புரிய நேர்ந்தது. முதலிலே பாபர் தோற்றுப்போய் மேவார் வேந்தனிடம் சமாதானம் பேசிக் கப்பம் கட்டி வாழ்ந்துவரவும் கருதி நின்றனன். இதற்கு அச்சங்கரன் சம்மதிக்காது போகவே, மீண்டும் போர் மூண்டது. பாபரின் சேனைகள் சின்னபின்னமாயின. என் செய்வ தெனப் பாபர் ஏக்கம் கொண்டு கிடந்தான். சங்கரனே வெற்றி மாலை சூடுவதாக இருந்தது. வெண்ணெய் திரண்டுவரும் சமயத்தில் தயிர்ப்பானை உடைந்ததே போல், சங்கரசிம்மனது படைத்தலைவனொருவன் துரோகம் புரிந்து பகைவன் பக்கம் போகலானுன். அதனுல் பாபர் வெற்றிபெற, இத்தேசத்திலே மொகலாய வரசு தோன்றலாயிற்று.

இராஜபுதனத்திலுள்ள மாருவாரம், ஜயபுரி முதலிய நாடுகள் மொகலாயருடன் விவாக சம்பந்தம் கொண்டு வணங்கிநிற்க, மத்தியபதியோ எட்டாவது நூற்றுண்டு முதல் 18-வது நூற்றுண்டு வரையில் மனவலி குன்றுது முகம்மதிய அரசுகளுடன் சமர்புரிந்து வந்தது. ஆகவே

மொகலாய அரசர் மேவாரைத் தம் வசப்படுத்த, சாம பேத தான தண்டம் எனும் நால்வகை உபாயங்களையும் கையாண்டு பார்த்தனர். அம்மத்தியபதியோ ஒன்றுக்கும் சலிக்காது தனித்துத் தலைசிறந்து விளங்கிற்று.

மொகலாய சக்கரவர்த்திகளில் சிறந்த அக்பர் அம் மேவாரின் பான்மை கண்டு உள்ளூர மகிழ்ந்தனனாயினும், அதனையும் அடக்கிப் போடவேண்டும் என்று கங்கணம் பூண்டான். அச்சமயம் மத்தியபதியின் மன்னவனான பிரதாப சிம்மன் என்பான் (தோளிரண்டுமே துணையெனக் கொண்டு,) அக்பருடன் இருபத்தைந்து ஆண்டு அரும்போர் புரிய நேர்ந்தது. அப்போரில் பிரதாப சிம்மன் சொல்லொணுக் கஷ்ட நஷ்டமடைந்தும், பகைவனுக்குப் பணியவில்லை. வீரச்சுவை சிறந்து விளங்கும் பிரதாபன் சரிதத்தை இனிக் கூறுவோம்.

---

3. சித்தூரின் வீழ்ச்சி

மகாராணு உதயசிம்மன் என்பான் மேவார் நாட்டின் மன்னவனாக 1541-ஆம் ஆண்டிலே சித்தூரில் அரியணை ஏறினன். இத்தேசத்திலே பேரரசு கொள்ள முயன்ற மொகலாய பாபரை எதிர்த்துப் பேராண்மை காட்டிப் பெரும் புகழ்பெற்ற சங்கர சிம்மனது மைந்தனே உதயன். (புலியின் வயிற்றில் பூனை பிறந்ததே போல்) உதயன் தோன்றி, அரசுக்குரிய அருங்குணம் எதுவும் இல்லாது போயினன். மேலும் அவ்வுதயன் அரசியலைக் கவனியாமல் இன்ப வாழ்வில் பெரிதும் ஆழ்ந்து கிடக்கலானன். அவன் மனத்தைக் கொள்ளை

கொண்ட தேவி என்னும் பெண்பாலே ஆட்சி புரிந்து வந்தனள். பெண்ணேவல் செய்தொழுகும் பேதையான உதயன் முடிசூடியது மத்தியபதியின் சாபத்தீடுபோலும் என்று நாட்டுப் பெருமக்களும் பாளையக்காரரும் வருந்திக்கிடந்தனர்.

அக்காலத்திலே டில்லியிலிருந்து வட இந்தியாவை ஆண்டுவந்த மொகலாய வரசன் ஹுமாயூன் எனப்படுவான். அவன் பாபர் சக்கரவர்த்தியின் புதல்வன். அவனுக்கு 1541-ஆம் ஆண்டில் அக்பரெனும் அரிய மைந்தனொருவன் தோன்றினன். (விளையும் பயிர் முளையிலே தெரியும்) என்பதற்கிணங்க, அக்பர் தனது பன்னிரண்டாவது வயதில் படைத்தலைமை வகித்து, பட்டாணியரைப் போரிலே புறங்கண்டு, பிதாவுக்குப் புகழும்பெருமையும் தேடிக் கொடுக்கலானன். ஹுமாயூன் ஆவி துறந்தபின் அக்பர் தனது பதினெட்டாம் வயதில் பட்டமேறினன். இந்தியாவிலே மொகலாய வரசுக்கு விதை போட்டவன் பாபர் என்ருல், அவன் பேரப்பிள்ளையான அக்பரே அதனைப் பேரரசாக்கி இங்கே நிலைநாட்டியவன். அக்பரிடம் அரசுக்கு உரிய அறிவாற்றல்கள் யாவும் நிரம்பியிருந்தன.

தனது இளமையிலேயே அக்பர் இராஜபுத்திரரின் வீரதீரத்தை நன்கறிந்தவன்; அன்னாரின் பக்கபலம் இன்றேல், மொகலாய வரசு இப்பூமியில் நிலைபெருது என்று தன் மதிவன்மையினுல் உணர்ந்து கொண்டவன். ஆதலினுல் அவ் வீர புருஷர்களை எங்ஙனமேனும் வசஞ்செய்துகொள்ள வேண்டுமென அவனுக்குப் பேராவல் பிறந்தது. அதுபற்றி அவன் இராஜதந்திரங்கள் நான்கையும் சமயோசிதமாகக் கையாண்டு, சாமோபாயங்கொண்டு இராஜபுத்திரரில் சிலரை நேசராக்கிக்

கொண்டான்; தானோபாயத்தினல் சிலரை அணைத்து ஆதரித்தான்; பேதோபாயத்தினல் சிலரை வசமாக்கிக் கொண்டான்.

முதல் மூவகை உபாயங்களில் எதுவும் மேவாரின் விஷயத்தில் பயன்படவில்லை. ஆகவே, அக்பர் தண்டோ பாயத்தைக் கையாளவே காலங் கருதியிருந்தனன். ஒன்றுக்கும் உதவாத உதயன் மத்தியபதி மன்னவனுகி மாயத்தில் மூழ்கிக் கிடப்பதையும், அதுகண்டு நாட்டுப் பெருமக்கள் வருந்தி நிற்பதையும், அக்பர் அறிந்ததும், மொகலாயச்சேனை சித்தூரைக் குறிகொண்டு கடல்போல் கனைத்துப் பொங்கி எழுந்து வரலாயிற்று.

சித்தூர் சீரழியின் அப்பழிச்சொல் தன்னை மட்டுமல்லாது தன் இனத்தையும் சாருமெனக் கண்ட தேவி என்பாள் போர்க்கோலங் கொண்டு புறப்பட்டனள். சித்தூர் வீரரும் யுத்தசன்னத்த ராயினர். தேவியே படைத்தலைமை வகித்து அணிவரிசையில் முன்னின்று ஆண்சிங்கம்போல் சமர் செய்தாள். இராஜபுத்திரரின் வீராவேசம் இத்தன்மையதென அச்சண்டையில்தான் அக்பருக்கு நன்கு தெரியவந்தது. மூர்க்கமாக அமர் புரிந்தும் மொகலாயரது சேனை சித்தூர் வீரரை எதிர்த்து நிற்க இயலவில்லை. மொகலாய அணிவரிசை பல இடங்களில் முறிபட்டுச் சிதறுண்டன. உடனே அவ்வீர மாது தன் பண்டவகுப்புடன் சென்று அக்பரின் பாசறையையும் தாக்கலானுள். அக்பர் அவ்வேளை அவதி நேருமென எண்ணி, ஒட்டை மனத்தனுகி ஊர் சேர்ந்தான். ஆயினும் பெண்ணொருத்திக்கு முதுகு காட்டிவந்த அவமானம் அவனைப் புண்படுத்தியது. ஆதலின், எப்பாடு பட்டாயினும் சித்தூரைப் பிடித்தே தீரவேண்டுமென அவன் தீர்மானம் பூண்டனன்.

இதற்கிடையில் உதயசிம்மனது குணக்கேட்டால் மேவார் நாட்டில் கலகமும் பூசல்களும் மிகுந்தன. அக்பர் அதுகண்டு, மீண்டும் சித்தூரை நோக்கி ஒரு பெரும் படை கொண்டுபோனான். உதயசிம்மனோ பகைவன் வரவுகேட்டுச் சித்தூரைவிட்டு ஓட்டம் பிடித்தான். சித்தூர்வாசிகள் அரசனது அவலத்தையும் அக்பரது ஆசையையும் கண்டு சிங்கநாதத்துடன் கிளம்பினர். ஜயமல்லன் என்பான் சேனைத்தலைமை பூண்டு நெடுநாள் போர் புரிந்து பகைவரைக் கலக்கி முடிவிலே வீரசுவர்க்கம் போயினன்.

அவனுக்குப்பின்பு, பதினாறுவயதும் நிரம்பப்பெறாத பட்டா என்பான் படைத்தலைமை வகித்து, மொகலாயரை வாட்டி வானுலகம் புகுந்தான். மாதரிலும் பலர் ஆண் வேடங்கொண்டு அருஞ்சமர் ஆற்றி ஆருயிர் விடுத்தனர். சித்தூர்க் கோட்டையின் உயிர்நிலையான ஒரு பாகம் அக்பரின் வசப்பட்டுவிட்டது. கோட்டைக்குள்ளிருந்த குலமாதர் அதுகேட்டுப் பகைவரால் மானபங்கம் நேருமென அஞ்சி, அக்னி குண்டத்தில் இறங்கி ஆவி நீத்தனர். அப்பால், எஞ்சியிருந்த ஆடவர் மஞ்சள்நிற ஆடை பூண்டு, கோட்டைக் கதவுகளைத் திறந்துபோட்டு, போர்முனையில் பாய்ந்து, மொகலாயரில் பலரைப் பலி கொண்டபின் மானமுடன் மாண்டு வீழ்ந்தனர்.

சித்தூர்க் கோட்டைக்குள் அக்பர் சக்கரவர்த்தி புகுந்தும், பாழ்பட்ட பழம் பதியைக் கண்டனனேயன்றி, பார்ப்போரின் கண்ணைக் கவரும் அலங்காரம் ஒன்றையும் காணவில்லை. மேவார் மன்னவரின் வருகையையும் புறப்பாட்டையும் பேரிடிபோல் அறிவிக்கும் போர்முரசங்கள் இரண்டையும் கண்டு, அளவிலா ஆனந்தங்கொண்டு அவற்றை அக்பர் கைப்பற்றிக்கொண்

டான்; இராஜபுத்திரரின் குலதெய்வமான ஸ்ரீ அம்மை பவானியின் அழகிய அகண்டதீபத்தை எடுத்துச் சென்றான்; சித்திர வேலைப்பாடமைந்த கோட்டைக் கதவுகள் இரண்டையும் பெயர்த்துப் போனான். பின்னரே பழிக்குப்பழி வாங்கிவிட்டதாகச் சற்றே அக்பருக்கு ஆறுதல் உண்டாயிற்று.

அக்பர் டில்லி சென்றபின்னர், உதயசிம்மன் திரும்பி வந்து உதயபுரி என்னும் நகரொன்று நிருமித்தான். நான்காண்டு தீர்ந்ததும் அவன் காலகதி ஆயினன். கனலிசான்றாய் மணம் புரிந்துகொண்ட மங்கையரிடமாக அவனுக்கு இருபத்தைந்து புதல்வர்கள் இருந்தார்கள்.

---

4. பிரதாபனது சிந்தாகுலம்

திருவையாற்றான் இருந்துங் கெடுத்தான், செத்துங் கெடுத்தான் என்று ஒரு பழமொழி யுண்டு. அங்ஙனமே உதயசிம்மனும் தான் உயிருடன் இருந்த காலத்தும் மேவாரின் மேன்மையைக் கெடுத்தான்; இறந்துபட்டபொழுதும் ஒரு சச்சரவை உண்டுபண்ணிப் போயினன். உதயன் மைந்தர் இருபத்தைவரில் முதல்வனான சக்த சிம்மன் இளமையிலே நாடு கடத்தப்பட்டுப் போக, எஞ்சிய புதல்வர் இருபத்து நால்வரே. அன்னாரில் தலைப்பிள்ளையான பிரதாபனுக்கே முடிசூட்டுதல் முறையாம். ஆனால் உதயனுக்கோ தன் குமாரரில் ஒருவனான ஜகமல்லனிடமே வாஞ்சை அதிகம். ஆதலின் ஜகமல்லனுக்கே முடி சூட்டுவிக்க வேண்டுமென அவன் தனது கடைநாளில் கூறிச்சென்றான். அவ்விதமே ஜக

மல்லனைச் சிம்மாசனத்தில் ஏற்றி மகுடாபிஷேகம் செய்வதற்கான ஏற்பாடுகள் யாவும் உதயபுரியில் நடந்து வந்தன.

மத்தியபதிலே மன்னவர் மரிப்பின், அன்னாருக்குரிய ஈமக்கிரியைகள் அரண்மனையில் நடப்பதில்லை; புரோகிதரின் இல்லத்திலேயே நடத்தல் வழக்கம். அரண்மனையிலே மைந்தன் அரியணையில் அமருவதற்கான அலங்கார ஆடம்பரங்கள் நடைபெறும். அங்ஙனமே உதயனுக்குரிய சடங்குகள் புரோகிதரின் வீட்டில் நடக்க, பாளையக்காரர் அனைவரும் அங்குச் சென்றிருந்தனர். பிரதாபனது மாமனான பாளையக்காரனும் ஆங்கு விஜயம் செய்திருந்தான்.

அப்போது பிரதாபனது மாமன், மத்தியபதி நாட்டின் தலைமைப் பாளையக்காரனும் கிருஷ்ண சிம்மனை நோக்கி, "சோதர! என் மருமகனாகிய பிரதாபனே தலைப்பிள்ளை; ஆதலின் அவனுக்கே அரசு உரித்தாகும். அங்ஙனமிருக்க, மற்றொரு மைந்தனை மன்னவனாக்க நீயும் மனமொருமித்தது மாண்போ? இராஜமுறைமைதான் ஆமோ?" என்று வினவினான்.

அதற்குக் கிருஷ்ணசிம்மன், "அன்ப! பிரதாபனே பட்டத்துக்கு உரியவன் என்பதை யான் நன்கு அறிவேன். ஆயினும் சாகும் தருணத்தில் நோயாளியொருவன் தனக்குப் பால் வேண்டுமென விரும்பின் அதனை யாவரே மறுப்பார்? அவ்விதமே ஜகமல்லனை அரியணையில் அமர்த்தவேண்டுமென உதயன் தனது கடைநாளிலே வேண்டிக்கொண்டனன். அதுபற்றியே யானும் அதற்கு இணங்கினேன். ஆயினும் உன் மருமகன் பிரதாபனைப் பட்டத்தில் அமர்த்தல் கடினமன்று. இதற்காக நீ கவலையுறல் வேண்டா," என்று பதில் சொல்லி ஆற்றினான்.

இனி, இராஜ மைந்தரிலே ஒருவன் பட்டஞ் சூடியதும், மற்றைய புதல்வர் தலைநகரைத் துறந்து தங்களுக்கு விதித்துள்ள நகரங்களில் சென்று வாழ்தல் விதியாம். அரியாசனத்தில் அமர்வதற்சாக ஜகமல்லன் அத்தாணி மண்டபம் அணுகியதும், பிரதாபன், "நமக்கோ அரசில்லை : தந்தை விரும்பியவண்ணம் ஜகமல்லனே ஜகத்பதியாகட்டும்," என்றெண்ணி உதயபுரியை விட்டகல நினைந்து குதிரையேறினன் அதுசமயம் கிருஷ்ணனும் மற்றும் சில பாளையக்காரரும் சபாமண்டபம் சேர்ந்தார்கள். ஜகமல்லனும் அரியணையில் அமர ஆவலுடன் ஆயத்தமா யிருந்தான்.

அவ்வேளை கிருஷ்ணனும் இன்னொரு பாளையக்காரனும் ஜகமல்லனை நெருங்கி, அவனது இரு கைகளையும் ஆளுக்கு ஒன்ருகப் பிடித்துக்கொண்டு, அரியணைக்கு எதிரே யிருந்த ஓர் ஆசனத்தில் அவனை யமர்த்தி, "மைந்த! மூத்தவனே முடிசூடல் வேண்டும்; உனது அண்ணன் பிரதாபனே சிம்மாசனத்துக்கு உரியவன்," என்றுரைத்தனர். அக்குமரன் "அந்தோ! கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாமல் போயிற்றே," என்று முதலில் கலங்கினனுயினும், அப்பால் விதியின்றி இசைந்து ஒருவாறு ஆறுதல் கொண்டான்.

பின்பு பிரதாபனையே சிம்மாசனத்தில் அமர்த்திக் கிருஷ்ணனும் ஏனைய பாளையக்காரரும் வணங்கினர்; நகரவாசிகளும் மாளிகை குறுகி, வேந்தனை வணங்கி உரிய காணிக்கையும் செலுத்தினர்கள். அப்பொழுது பங்குனி மாதம். அம்மாதத்திலே இராஜபுத்திரர் கானகஞ்சென்று வேட்டையாடுவது வழக்கம். மேலும் பட்டத்துக்கு வந்தவுடனே பார்த்திபனுங் கன்னிவேட்டையாடச் செல்லுதல் ஒரு கோட்பாடாம்.

அங்ஙனமே பிரதாபன் தனது பாளையக்காரரை நோக்கி, "என் குலத்தலைவர்காள்! இத்திங்களில் நாம் வேட்டமாடி, முள்ளம் பன்றியை மாய்த்துக் காளிதேவியைக் களிப்பிக்கவேண்டும்," என்றியம்பினன். அவ்வளவில் அனைவரும், வாள், வேல், வில், அம்பு முதலிய கருவிகளுடன் ஆரணியஞ் செல்லப் புறப்பட்டனர். வேட்டையிலே பிரதாபன் பல கொடிய விலங்குகளை வதைத்துத் தனது ஆற்றலை வெளிப்படுத்தினன். பலரும் அது கண்டு பிரதாபனது திறத்தை வியந்து, 'பிரதாபன் பிரதாபனுகவே விளங்குவான்' என்று புகழ்ந்து பேசினர்.

வேட்டையாடித் திரும்பியதும், பிரதாபன் தனது நாட்டின் நிலையை ஆராயலாயினன். இராஜபுதனத்துக்கே சிரம்போன்ற சித்தூரோ அச்சமயம் அன்னியரின் வசப்பட்டுக் கிடந்தது. நாடு நாடாக இருக்கவில்லை. அரண்மனையின் பொக்கிஷமோ வறண்டு கிடந்தது. பாளையக்காரரும் பரிவீரரும் சோர்ந்து கிடந்தனர். ஆனல் குலத்துக்குரிய வீரவுணர்ச்சி அன்னுரை விட்டகலவில்லை. மேன்மையுற்ற மேவார் சீரழிந்து கிடப்பதற்கு அன்னிய அரசே காரணமெனப் பிரதாபசிம்மன் உணர்ந்துகொண்டான்.

ஆதலின் பிரதாபன், "அந்தோ! தலைசிறந்து விளங்கிய சித்தூர் நகரம் அன்னியருக்கு உட்பட்டுக் கிடப்பதோ? அதனை மீட்டு மேன்மை நாட்டுதல் நம் கடமை அன்ரே? பழம்பதியை மீட்டு, நம் மரபின் மாண்பை மீண்டும் நிலைநாட்டாது போயின், நாம் அரசனுயிருந்து யாது பயன்? உயிருடன் உலவுவதும் அவமேயாம். சின்னஞ்சிறு வயதுமுதல் நம் மூதாதைகளின் வீரப்ரதாபங்களைக் கேட்டறிந்த யாம் அப்பழியைத் துடைக்காவிடின், எம் குலம் என்னும்?" என்று சிந்திக்கலானன்.

அவ்வேளை ஆதிகாலந் தொட்டுத் தனது முன்னோர் பல போர்முனைகளில் விளைத்த வீரச்செயல்களை அப்பிரதாபன் ஒருமுறை எண்ணிப் பார்க்கத் தொடங்கினன்:—

"நம் குலமுதல்வன் பூபசிம்மனது பெருமையே பெருமை! அம்மை பவானி அருள் சுரந்து தனது திருக்கையினல் அவனுக்கு அரையிலே உடைவாள் செருகி அருளினள். அக்கொற்றவன் இந்த ஹிந்துஸ்தானமெங்கும் வெற்றிக்கொடி தூக்கியதோடு நில்லாமல், காந்தாரம், பாரசீகம், துருக்கிஸ்தானம் முதலிய பல அயல் தேசங்களிலும் அந்தர மளாவப் புகழ்க்கொடி நாட்டினன். அங்ஙனமிருக்க, நமது புராதன நகராம் சித்தூரிலே இன்று பிறைக்கொடி பறத்தல் நமக்கு அழகாமோ? ஆண்மைதான் ஆமோ? மீண்டும் நமது காவிக்கொடி அந்நகரில் பறந்தாலன்றோ பிரதாபன் எனும் பெயர் ஏற்கும்?

"நம் மரபில் வந்த பிருதிவி ராஜன் என்பான் இந்திரப்பிரஸ்த நகரிலே சக்கரவர்த்தியாக விளங்கிய காலத்தில், தண்டுகொண்டு இங்குவந்த முகம்மதுகோரியை முறியடித்து மொய்புகழ் பெற்றனன். மீண்டும் அந்தக் கோரி கொக்கரித்து வந்தபொழுது, நமது மூதாதையான சமர சிம்மன் பிருதிவிக்குத் துணைசென்று, ஆண் சிங்கம்போல் சமர்புரிந்து, இரணகளத்திலே சுதந்தர தாகத்தினல் ஆவி துறந்து வீரசுவர்க்கம் புகுந்திருக்க, அவன் வழித்தோன்றலாகிய நாம் மத்தியபதி மங்கிக்கிடக்கும் நேரத்தில் வாளாவிராமல் பொங்கியெழ வேண்டுமன்றோ?

"பட்டாணியப் பார்த்திபனை அல்லாவுத்தீன் என்பான் நமது பெண்கள் நாயகமாம் பத்மினியின் பேரழகைக் கேட்டுப் பெரும்படையுடன் வந்து கொடும் போர் புரிந்தும், அவன் எண்ணம் மண்ணைக் கவ்வும்

வண்ணம் நம்முன்னோர் வாளமர் முறுக்கி அப்பெண்ணரசியின் கற்பைக் காத்தனர். இப்பொழுதோ பலர் தம் குலப்பெருமையைக் காற்றில் பறக்கவிட்டு, மகளை மாற்றானுக்குக் கொடுத்து மங்கி நிற்கின்றனரே! மானம் போக்கும் இம்மகிமையினும் மானம் பொருந்திய வீரச் சாவும் வீழ்வுமே மேலாம் என்பதை யாரே மறுப்பர்?

"இம்மட்டோ? அல்லாவுத்தீன் மீண்டும் படை கொண்டு வந்தபொழுது, சீரும் சிறப்பும் வாய்ந்த சித்தூரைக் காக்கக் கருதிய மகாராணா ஹரசிம்மன் தன் செல்வக் குமாரர் பதினொருவருடன் போர்க்களத்திலே பலியாயினன். களப்பலியாக வேண்டி அக்குமரர் ஒவ்வொருவரும் நான் முன்னே நான் முன்னே என்று மார்தட்டி நின்றதை யாவரே மறக்க இயலும்? அத்தகைய சித்தூரை மீட்க எத்துணைத் தியாகமும் நாம் செய்தே தீர வேண்டும். சித்தூரை யிழந்து நிற்கும் மத்தியபதி சிரமிழந்த உடலை நிகர்க்குமே! மத்தியபதி மாசுகொண்டு கிடக்கையில், மேவாரின் மன்னவனென எவ்விதம் மன மகிழ்வுடன் நாம் வாழ முடியும்?

"அல்லாவுத்தீன் கைப்பற்றிய சித்தூரை அப்பால் அமர சிம்மன் மீட்டு மாண்பு எய்தியதுபோல், உதயன் இழந்த சித்தூரை அவன் மைந்தன் மீட்டு மகிமை எய்தல் வேண்டுமன்றோ? பெயரளவில் பிரதாபனாயிருந்து யாது பயன்? அப்பெயரைக் காரணப் பெயராக்கிக் கொள்ளினன்றோ மேன்மை பெறலாம்? மகாராணா கும்பனது காலத்தில் முகம்மதிய மன்னரில் பலர் சித்தூரிலே சிறைபட்டுக் கிடந்திருக்கையில், தற்சமயம் அங்கே முகம்மதியரின் கொடி குலவிப் பறத்தல் ஒண்ணுமோ?

"தகப்பனால் நேர்ந்த பழியைத் துடைத்தல் தநயனது கடனேயாம். இது முடியாவிடின் இப்பாவி மகன்

இறந்து படுதலே மேலாகும். ஜாவேரிபாய், கர்ணுவதி, பத்மாவதி முதலிய நம் குலமாதரும் தேசாபிமானம் கொண்டு இப்புன்புலால் யாக்கையை ஒரு பொருட்டாக மதியாமல் போர்க்களத்திலே ஆவி விடுத்திருக்கின்றன ரன்றோ? ஆண்பிள்ளையான பிரதாபசிம்மன் யாது செய்யப்போகின்றான்?

"மரபின் மானமும் இராஜபக்தியுமே கொண்டு, ஜயமல்லன், பட்டு முதலிய பாளையக்காரர் மாற்றானுக்கு மண்டியிட மனமின்றித் தலைகொடுத்ததை என்னென்று உரைப்போம்? பதின்மூன்று வயதிலிருந்து இருபத்து மூன்று வயதடைவதற்குள் எங்கும் புகழ் பரப்பினான் பிருதிவி ராஜன். அவனன்றோ ஆண்மகன்? அவனே உண்மையான இராஜபுத்திர சுத்த வீரன் ஆவான்!

"பூபசிம்மனது வழியில் வந்த ஒருவன் மானிடனுக்கா தலைவணங்குவது? உயிருடன் இருக்கும்வரையில் பிரதாபன் யாருக்கும் தலைவணங்கான். சித்தூரை அக்பர் படுத்திய பாடு பகருந் தரமோ? அதற்கு மாற்றாகப் பீடு பெறுவதே பிரதாபன் கடமையாம். இன்றேல், இப்பிரதாபன் நடைபிணம்போல் திரிந்துழலவேண்டும்."

இங்ஙனம் பிரதாபன் பலவாறு நினைந்து நெஞ்சம் புண்ணாகினன். ஆற்றொணா மனப்புண் அவனைப் பெரிதும் வாட்ட, அவன் மெய்வருத்தம் எதுவும் பாராது, எத்தீமையையும் சட்டை செய்யாது, கருமத்திலேயே கண்ணாயிருக்கத் தலைப்பட்டனன். அந்நாளில் அவன் கொண்ட சபதம் ஈதாகும்:—

"மேவார்நாடு மாசடைந்து கிடக்கையில், மன்னவனுக்கு ஆடம்பரமும் அலங்காரமும் கூடா; தங்கத்தட்டுகளும் வெள்ளிப் பாத்திரங்களும் அவனுக்கு ஏன்? இலையினில் அவன் உணவருந்தினால் போதாதோ? வெறுந்

தரையில் உணவு கொள்ளுதலும் ஏற்குமே! மலரணையி லும் பஞ்சணையிலும் படுத்தயர இதுவோ காலம்? வைக் கோல் மெத்தையில் படுத்துறங்குதல் போதுமானது. தாடி மீசைகளை அவ்வப்போது அழகுபெறக் கத்தரித் துக்கொள்ளுதல் அடுக்குமோ? வெற்றிகொண்ட காலத் தில் அல்லவா மன்னவனுக்கு முன்னே போர்முரசங்கள் முழங்கவேண்டும்? பகைவனுக்கு வெற்றியைக் கொடுத்த பின்னர், அரசனுக்குப் பின்னே அம்முரசங்கள் முழங்கு தலே சாலும். சித்தூர் நகரம் மீட்கப்பட்டாலன்றி இப் பிரதாபனும் சரி, இவன் சந்ததியாரும் சரி, மேற்சொல் லிய ஆடம்பர அலங்காரங்களை விரும்புதல் கூடாது."

பிரதாபசிம்மன் விதித்துப் போன வண்ணமே மேவார் மன்னவர் இன்றும் தம் தாடி மீசைகளைக் கத் தரித்துக் கொள்ளாமல் வாளாவிட்டிருக்கின்றனர். தங் கம் வெள்ளியினாலாகிய பாத்திரங்களில் அன்னார் அன் னம் கொள்வதில்லை; ஒருசமயம் கொள்ளினும், கீழே ஓர் இலை போட்டுக் கொள்ளுகின்றனர். பஞ்சணையில் படுப்பினும், அதன் கீழே வைக்கோலைப் பரப்பி வைப்ப துண்டு.

உதயசிம்மனது கோழைத் தனத்தினால் குலைந்து கிடந்த மத்தியபதியின் அரசியலைப் பிரதாபன் ஓர் ஒழுங்குபடுத்தலானான்; பாளையப்பட்டுகளின் மானியங் களை ஆராய்ந்து பார்த்து அவர்களின் அன்புக்கும் பக் திக்கும் பாத்திரமானான்; போர்வீரருக்கு உற்சாகம் ஓங்கி வளர்வதற்குரிய கருமங்கள் யாவற்றையும் கவனித் தான்; குடிமக்களின் தேசபக்தியும் குலாபிமானமும் பெருகுமாறு அவர்களுக்குரிய நலபலங்கள் யாவும் தேடித் தந்தான்; வரவுக்கேற்ற செலவே செய்யும் வண் ணம் அமைச்சருக்குக் கட்டளையிட்டான்; தேசத்தின்

பாதுகாப்புக்கான கோட்டைகளை யெல்லாம் பலப்படுத்தினான்.

இங்ஙனம் நாட்டுக்கான பாதுகாப்புக்களையெல்லாம் பலப்படுத்தி, மக்களின் நலத்தில் சிந்தை செலுத்தி, காட்சிக்கு எளியவனாகி, கடுஞ்சொல் ஏதும் இன்றி, அஞ்சாமை ஈகை அறிவு ஊக்கம் இந்நான்கினும் எஞ்சாது முறை செய்து மேவாரை அவன் காத்துவந்தனன். பாக்கியமும் பணமும் அவன் நிரம்பப் பெறவில்லையாயினும், பாளையக்காரரின் பரம விசுவாசத்தையும் பெருமக்களின் பேரன்பையும் வீரலட்சுமியின் இன்னருளையும் நிரம்பப்பெற்றிருந்தான்.

5. மொகலாயனது மாயவலை

டில்லிமா நகரிலே பாதுஷவாகப் பட்டமேறியவுடன் பாரதபூமி யனைத்தையும் ஒரு குடைக்கீழ் ஆள வேண்டுமென்று அக்பர் ஆவல் கொண்டனன். அந்த ஆவல் பூர்த்தியாவதற்கு அவனது நண்பர்களும் உற்ற துணையாக இருந்தார்கள். திருமகளும் அவனைக் கடைக்கணிக்கலானாள். ஆதலின் தண்டுகொண்டு சென்றவிடமெல்லாம் அக்பர் சக்கரவர்த்தி சிறப்பே எய்தினன். முகம்மதிய சிற்றரசுகளில் பலவும் அவன் அடிவணங்கின. அப்பால் ஹிந்து ராஜ்யங்களின்மீது அவன் கவனஞ் சென்றது.

இராஜபுதனத்திலே மாருவாரம், ஜயபுரி, பேகநேரு, பூண்டி முதலிய அரசுகள் பலவும் முன்னம் ஒருவிதத்தில் மேவாரின் சிற்றரசுகள்போல் விளங்கியவை. அக்பரது

பாட்டனுன பாபரை எதிர்ப்பதற்கு அந்நாள் சங்கரசிம்மன் சீறியெழுந்த காலையில், வட இந்தியாவில் வாழ்ந்த முடிவேந்தர், சிற்றரசர், பட்டவர்த்தனர் முதலிய யாவரும் அவனுக்குத் துணையாகச் சென்றனர். மேவார் மன்னவனையே அன்னவர், "ஹிந்துபதி" என்று பெருமையாகப் பேசி நின்றதைக் குறிப்பிடல் வேண்டும். சங்கர சிம்மன் பரகதி போனபின், இராஜபுதனத்தின் இதர நாடுகள் மத்தியபதியை அவ்வளவாக மதிக்கவில்லை. சங்கர சிம்மனுக்குப்பின் சிம்மாசனம் ஏறியவர்கள் அத்துணை தீரபுருஷர்களாக இல்லாது போனதே அதற்குக் காரணமாம்.

பிரதாபனது காலத்திலே அந்நாடுகளில் சிறந்து விளங்கியது மாருவாரமேயாம். அக்பரது தந்தையான ஹுமாயூனைப் பட்டத்திலிருந்து துரத்தி டில்லியில் அரியணை ஏறிய ஷேர்ஷா எனும் வீரபுருஷனை அந்நாட்டரசனுன மாலதேவன் என்பான் ஒரு சில துணைவருடன் எதிர்த்து நின்று இணையிலா ஆற்றல் காட்டினுன். அத்தகைய மாலதேவன்மீது அக்பர் சக்கரவர்த்தி படையெடுத்துச் சென்றுன்.

மாலதேவன் அது கண்டு சீறிக் கிளம்பவே, சமரில் அக்பர் அடியுண்டு புறங்காட்டி ஓட நேர்ந்தது. ஆயினும் அக்பர் விடாமுயற்சியுடன் மீண்டும் பெருஞ்சேனையொன்று திரட்டிவந்து மாலதேவனுடன் போர் தொடுத்தான். போரிலே அம்மன்னவனை வெற்றிகொள்ள முதலில் அக்பரால் ஆகவில்லை. டில்லி வேந்தன் வஞ்சனை வழியில் இறங்கி, மாருவார வீரசிங்கங்களில் சிலரைப் பேதிக்கலாயினன். அது காரணமாக மாலதேவன் வெற்றிமாலை சூட முடியாது போயிற்று. எனினும் மாற்றுனைப் பணிந்து வாழ மாலதேவன் மனமொப்ப

வில்லை. அரசை மைந்தனிடம் ஒப்படைத்து அவன் விலகிக்கொண்டான்.

அம்மைந்தனை அக்பர் சாமதான உபாயங்களினல் மயக்கலானுன். அப்புதல்வன் இராஜபுத்திரரின் குலப் பெருமையை மதியாமல், அக்பரின் மந்தகாசத்தைக் கண்டு அகம் மகிழலாயினன். அதன் விளைவாக அக்குல மங்கை யொருத்தி அக்பரின் குமாரன் ஜிஹாங்கீருக்கு மனைவியாயினள். அதற்கு ஈடாக அக்பர் அம்மைந்தனுக்கு இராஜா எனும் பட்டம் வழங்கி, நான்கு சிறு நாடுகளையும் மானியமாக அளித்தனன். அவ்விதம் இராஜபுதன நாடுகளில் ஒன்று தன் குலத்தை விற்று டில்லியரசுடன் குலாவி நிற்கலாயிற்று.

ஜயபுரி எனும் நாடோ, முன்னமேயே அக்பருடன் விவாக சம்பந்தம் கொண்டு, அக்பரின் சிற்றரசுகளில் ஒன்ருக விளங்கிநின்றது. இராஜபுதனத்தின் பிரபல நாடுகளான மாருவாரமும் ஜயபுரியும் அங்ஙனம் டில்லியரசின் மாயவலையில் பட்டுப் பரமானந்தம் கொண்டன என்ருல், பேகநேரு, பூண்டி போன்ற சிற்றரசுகளைப்பற்றிப் பேசவும் வேண்டுமோ? அவையும் விவாஹத் தொடர்பினல் அக்பரது நட்பையும் முகமலர்ச்சியையும் பெற்று மகிழத் தலைப்பட்டன.

அங்ஙனம் இராஜபுத்திரர் பெண்ணைக் கொடுத்துத் தன்னைத் தழுவி நிற்கவே, மத்தியபதி நாடும் தழுவிநின்று தலைவணங்க வேண்டுமென அக்பர் விரும்புவது இயற்கை அல்லவா? மேலும் இராஜபுத்திரருடன் விவாக சம்பந்தம் கொண்டு, அன்னவரின் நேசத்தை மிகுதியும் பெற்று, இந்துக்களையும் முகம்மதியரையும் ஐக்கியப்படுத்தி, தனது வமிசத்தை இத்தேசத்தில் நன்கு நிலைநாட்டுவதே அக்பரது கருத்து என்னலாம். மற்ற நாடுகளைப்போல் மங்கை

யொருத்தியைத் தந்து மத்தியபதியும் பரிசும் வரிசையும் பெறலாமென வீரப்பிரதாபனுக்கு அக்பர் சக்கரவர்த்தி வெகு தந்திரமாகச் சொல்லி யனுப்பினன். பிரதாபன் அம்மாற்றங் கேட்டு, வேலெறிபட்ட வேங்கைபோல் துடித்து, "குலத்தை விற்று வெறுக்கை கொண்டு வாழ்வதினும் வீழ்வதே மேலாகும். எனது ஆருயிர் போயினும், மத்தியபதியில் எஞ்சியுள்ள பிரதேசங்களை இழப்பினும், இன்னும் எத்தகைய அனர்த்தம் நேரினும், அதற்கு உடன்படேன்," என்று பதில் விடுத்தனன்.

அப்பதில் கேட்டவுடனே அக்பர் பாதுஷாவின் ஆசைக் கனல் கோபக்கனலாக மாறியது. "இம்மத்தியபதி எம்மாத்திரம்? இராஜாளியின் முன்னே ஊர்க்குருவி உரம் பேசுவதோ? மேவார் நாட்டை முறியடித்து, பிரதாபனது வீரத்தை வாட்டியே தீருவேன்," என அக்பர் சபதம் பூண்டனன்.

ஈதிங்ஙனமிருக்க, பிரதாபனே அன்றுமுதல் மொகலாயருடன் குலவிவரும் இராஜபுத்திர நாடுகளுடனும் விவாக சம்பந்தம் கொள்ளவில்லை. அதுகண்டு மாருவார, ஜயபுரி அரசர்களுக்கு மேவாரின்மீது வைரம் உதிக்கலாயிற்று. உதிக்கவே, அந்நாட்டரசர் பலரும் குலாபிமானத்தை அறவே மறந்து அக்பரை முன்னையிலும் அதிகமாகத் தழுவிநிற்கலாயினர்; அன்றியும், தங்களை அப்பிரதாபன் அவமதிப்பதாக முறையிட்டு, அக்பரின் கோபக்கனல் கொழுந்துவிட் டெரியுமாறும் பெருமுயற்சிகள் செய்துவந்தனர். அன்னார் அவ்விதம் விபரீத நெறி கொள்ளாது, பிரதாபனைச் சார்ந்து நின்றிருப்பாராயின், இப்பூமியின் சரித்திரம் வேறு விதமாக முடிந்திருக்கும். பிரதாபனது சாபத்தீட்டையும் அக்பரது பாக்கிய வசத்தையும் யாவரே தடுக்கவல்லார்?

இராஜ தந்திரத்தில் கைவந்த அக்பர் தனது சாமோபாயம் பலிக்காமற் போகவே, தான பேதோபாயங்களைக் கையாளலானான்; பிரதாபனது பாளையக்காரரை எவ்வகையிலேனும் வசஞ்செய்துவிட வேண்டுமென அக்பர் சக்கரவர்த்தி கருதி, அரிய சூழ்ச்சிகள் பலவும் செய்யாநின்றனன்.

ஆனால் பிரதாபனது பாளையக்காரரோ, "மானமே பெரிது; பிராணனும் பதவியும் பெரியன அல்ல; முடிவு வரையில் சமர்செய்து பிரதாபனுடன் பொன்ற நேரினும், அஃதே எங்கள் கடனாம்," என்று துணிந்து, ஆசை வலையில் அகப்படாது கொதித்து நின்றனர். இராஜபுதனத்தின் மற்றைய அரசர் அனைவரும் பிரதாபசிம்மனைக் கைவிட்டு நின்றபோதிலும், பாளையக்காரர் மட்டும் அவனைக் கைவிடவில்லை. தேசபக்தியும் இராஜபக்தியும் நிறைந்துள்ள சுத்த வீரர் நெறி பிறழ்ந்து நடக்க மனம் ஒப்புவரோ?

பாளையத்தைப் பேதிக்க முடியாமற் போனது கண்டு, பிரதாபனது சோதரரில் இருவரை அக்பர் தன் பக்கம் இழுத்துக் கொண்டனன். அவர்களில் ஒருவன் பெயர் சக்தன்; மற்றவன் சகரன் எனப்படுவான். அவ்விருவரில் சக்த சிம்மன் பெருங் கீர்த்தி வாய்ந்தவன். இவனைப்பற்றி வேறோரிடத்தில் விரிவாகச் சொல்வோம். இவனும் பிரதாபசிம்மனும் இளம்பிராயத்தில் விளையாடி நிற்கையில், ஒருநாள் அவ்விளையாட்டே வினையாக முடிந்தது. அதுகாரணமாகச் சக்தன் சிந்தாகுலம் கொண்டு கிடக்கையில், அக்பர் அஃதுணர்ந்து, அவனுக்கு ஒரு நாட்டை யளித்து, உற்ற துணையாக அவனை அணைத்துக் கொண்டனன்.

சகரன் என்பானுக்கோ சக்தனைப்போல் பிரதாப னிடம் பகையில்லையாயினும், அசூயை மட்டும் இருந்தது. ஒரு பதியைத் தந்து அச்சகரனைத் தனது சிற்றரசரில் ஒருவராக அக்பர் அமர்த்திக்கொண்டான். அக்பரின் அருமந்த மைந்தன் ஜிஹாங்கீரின் உயிர்த்தோழனாகிய முகபத்கான் எனும் வீரதிலகன் அந்தச் சகரனது புதல் வனே யாவன்.

இராஜபுதன வேந்தர் பலரும் அங்ஙனம் மொகலாய வரசை அண்டிக் கிடப்பதையும், பிரதாபனது சோதர ரில் இருவர் அக்பருக்குத் துணையாக நிற்பதையும், மாய வலைவீசி அப் பாதுஷா இன்னல் விளைப்பதையும் கண்டு, பிரதாபனது பாளையக்காரரில் இரண்டொருவர் பேதுற லாயினர். அது கண்ட பிரதாபன் அன்னாரை வர வழைத்து, "வீரர்காள்! கூன் குருடு பேடு முதலிய ஊன மிருப்பினும், அவை உடலுடன் அழிந்துபோம். மானமி மான மிழந்து தொல்லை வலியு மிழந்து இப்பாருலகில் வாழின், ஏழேழு பிறப்பிலும் அபகீர்த்தியே தொடர்ந்து வரும். ஆதலின் எத்தகைய இடுக்கண் நேரினும் சரி, இறந்துபோக நேரினும் சரி, இரண்டு நாளைச்செல்வத்தை விரும்பி, மானத்தைத் துறந்திடல் ஆகுமோ? 'இராஜ புத்திரரில் மத்தியபதி வீரரேனும் மானமழியாது வாழ்ந் தனர். அல்லது வீரமுடன் வீழ்ந்தனர்,' எனும் பெயர் பெறல் வேண்டுமன்றோ? காலத்தையும் இடத்தையும் அறிந்து, காரியத்தின் மூலத்தையும் விளைவையும் ஓர்ந்து, முனைந்து முயலின் விதியையும் வெல்லலாம் என்பர் பெரியோர். படைத்தலைவனது துரோகத்தினால் சேனை முறிபட்டும், பகைவனைப் புறங்காணாது தலைநகர் திரும் பேன் என்று சபதம் பூண்டு சங்கரசிம்மன் ஆவி விடுத் திருக்க, அக்குலத்தில் உதித்த யான், பிரதாபன் என்று

பெயர்படைத்த யான், பகைவனுக்குப் பணிதல் என்பதைக் கனவிலும் கருதேன்," என்று பேசினன். பாளையக்காரர் அதுகேட்டு ஆவேசங்கொண்டு பிரதாபனை வணங்கி வாழ்த்திச் சென்றனர்.

அவ்வேளை ஜயபுரி நாட்டின் காவலனான மான சிம்மன் என்பான் டில்லிக்குச் செல்லும் வழியிலே பிரதாபனைக் காண வந்தனன். அவன் அக்பரின் வலதுகை போன்ற வீரர் வீரன். அவனது போர்த்திறமையையும் பேராற்றலையும் துணைகொண்டே, பலநாடுகளையும் நகரங்களையும அக்பர் வசஞ்செய்துகொள்ள முடிந்தது. வீரத்திலும் தீரத்திலும் அவனைப் பிரதாபனுக்கு நிகராகச் சொல்லலாம். மானசிம்மனது சிறிய தந்தையின் மகளொருத்தி அக்பரின் தகப்பனான ஹுமாயூனுக்கு வாழ்க்கைப்பட்டாளாதலின், அவன் அக்பருக்கு உறவினனும் ஆவான். அத்தகையோனது வரவு கேட்ட பிரதாபன் பெருந்தன்மை கொண்டு அவனை வரவேற்று உபசரித்தான்.

அப்பால் மானசிம்மனுக்கு விருந்து தயாராயிற்று. இலைகள் போட்டு அறுசுவை கலந்த உணவு வகைகளும் பரிமாறியாய்விட்டது. ஆனால் மானசிம்மனுடன் பந்தியில் வீற்றிருந்து உணவுகொள்ள வீரப்பிரதாபன் மனமொப்பவில்லை. 'மன்னவன் எங்கே?' என மானசிம்மன் வினவினன். அதற்கு, "ஐய! என் தந்தை தலைநோயினால் வருந்தியிருக்கிறார். ஆதலின் அவர் இங்கு வரவில்லை. அதுபற்றி எதுவும் நினைக்கவேண்டாம். தந்தைக்குப்பதிலாகத் தனயன் இங்குக் காத்து இருக்கின்றேன். ஆயாசம் இன்றி உண்டி கொள்ளுங்கள்," என்றனன் அமரசிம்மன்.

மானசிம்மன் அதுகேட்டு, "மைந்த! மகாராணுவின் தலைவலிக்குக் காரணம் இன்னதென யான் அறிவேன். நடந்தது நடந்துவிட்டது. மொகலாயருக்கு மங்கையைக் கொடுத்த பிழையை இனி மாற்றமுடியாது. என் செயலாம்? மகாராணு என்னுடனிருந்து அன்னமருந்தவில்லையாயின், என் மனம் சகிக்காது. இத்தனை நாட்களாக உன் தந்தையைக் கண்டுகளிக்க வேண்டுமென நான் எண்ணியிருந்தும் வெட்கம் வந்து குறுக்கிட்டு நின்றது. அதனை ஒருவாறு அகற்றிவிட்டு, இன்று இவண் வந்தேன்," என்று பயமும் பக்தியும் விசுவாசமும் ததும்ப மனங்கரைந்து மொழிந்தனன்.

இனி உள்ளக் கருத்தை ஒளித்துப்பயனில்லை என்று கண்ட பிரதாப சிம்மன், "வீர! குல ஒழுக்கத்தைக் கைவிட யான் துணியவில்லை. அதனுல் உனக்கு என்ன குறை? அக்பர் அன்பினைப் பெற்றுள்ளாய்! உண்டு செல்க," என்று வேண்டினுன். ஆனுல் மானசிம்மன் அன்னம் புசியாமல் வெகுண்டெழுந்து, "பிரதாபனது கர்வத்தைக் குலையாது போனுல், நான் மானசிம்மன் அல்லன்," என்று சூளுரைத்துப் பரிமீதேறிப் புறப்பட்டனன். பிரதாபன் தன் மாளிகையின் சாளரத்தே தோன்றி, "மானசிம்ம! உன்னைப் போர்முனையில் சந்திக்க யான் சித்தமாயுள்ளேன், வாள்முனையில் பார்க்கலாம் உனது ஆற்றலை," என்று வீரம் பொங்கப்பேசினன். அதுசமயம் அருகேயிருந்த ஒரு பாளையக்காரன், "அப்பா மானசிம்மா! உன் அத்தான் அக்பரையும் உடனழைத்துவா," என்று மனம் சுடக் கூறினன்.

மானசிம்மன் போயின பின்பு, விருந்து மண்டபம் அசுத்தமாய் விட்டதென நினைத்து ஏவலாளர் சாணம் கொண்டு மெழுகினர். வேதியர் கங்கைநீர் கொணர்ந்து

அவ்விடத்தில் தெளித்துச் சுத்தி செய்தனர். மானசிம்மன் அருகே வீற்றிருந்ததும் அசுத்தமெனக் கருதிய பாளையக்காரர் உடனே தூய நீராடி உடைகளை மாற்றிக் கொண்டனர். இச்செயல்கள் ஒவ்வொன்றும் ஒற்றர் மூலம் அக்பருக்கு எட்டாமற் போகுமோ? அந்த அவமதிப்பெல்லாம் தன்னையே சாருமெனக் கருதிய அக்பர் அடங்காச் சினத்தனானன். உடனே மொகலாயரது சேனை மத்தியபதியை நோக்கித் திரண்டெழலாயிற்று.

---

6. அக்பரின் படையெழுச்சி

அஜமேரு என்னும் நகரில் அக்பர் பாசறைகொண்டு தங்கித் தன் மைந்தன் ஸலீம் என்பானிடம் பெருஞ் சேனை ஒன்று கொடுத்துப் போருக்கு அனுப்பினன். பிரதாபசிம்மனுடன் வஞ்சினம் பேசிவந்த ராஜா மானசிம்மனும், சகரனது செல்வப் புதல்வனான முகபத்கான் எனும் வீர திலகனும், மொகலாய இளவரசின் பிரதம தளகர்த்தராக உடன் வந்தனர். மேலும் ஸலீமின் பக்கத்திலே எண்பதாயிரம் வீரர் எடுப்பாக இருந்தனர். இராஜபுத்திர சிற்றரசிலே பலர் அக்பர் மைந்தனுக்குப் பக்கபலமாயினர்.

பிரதாப சிம்மனிடம் இருந்த வீரர் இருபத்து ஈராயிரவரே யாவர். இராஜபுதனச் சிற்றரசரில் ஒருவர்கூட மேவார் மன்னவனுக்குத் துணை வரவில்லை. மத்தியபதியின் மகிமையையும் மரபின் மானத்தையும் காக்கக் கருதிய சில பாளையக்காரரே பிரதாபனுக்கு உற்ற துணையாக நின்றனர்.

பகைவனது பெருஞ் சேனை கிளம்பியதைக் கேட்டவுடன், மேவார் மக்கள் அனைவரும் சமவெளிகளை விடுத்து, மலைப்பிரதேசங்களில் சென்று குடியேறவேண்டுமென்று பிரதாபன் ஆணையிட்டனன். தனது குடிமக்களில் ஒருவரும மாற்றான் கையில் சிக்கக்கூடாது என்பதே பிரதாபனது கருத்தாகும். ஆணையின்படி நடவாதார் தலைவாங்கப்படுவர் என்று மேவாரெங்கும் பறை சாற்றப் பெற்றது. மன்னவனது மனக்கோளை நன்குணர்ந்த பிரஜைகள் அனைவரும் அங்ஙனமே மலைப்பிரதேசங்களில் புகுந்து வசிக்கலானார்கள். அதனால், செழுமையும் கொழுமையும் கொண்டு துலங்கிய மேவாரின் நகரங்கள் அனைத்தும் பாழடைந்த பதிபோல் காணப்பட்டன. ஆணைக்கிணங்க அனைவரும் நடக்கின்றனரா என்று கண்கூடாகக் கண்டறிய அக்காவலன் தன் நாடெங்கும் சுற்றிப் பார்த்தான். பச்சென்றிருந்த சமவெளிகள் பாலைவனம்போல் தென்பட்டன; பயிர்பச்சைகள் இருந்த இடமெல்லாம் முட்செடிகளே நிரம்பிக்கிடந்தன; மக்களின் பழைய வாசஸ்தலங்களிலே ஆந்தையும் கோட்டானும் புலியும் கரடியும் குடியேறிக் கூடிக் குலாவிக்கொண்டிருந்தன.

இத்தகைய பாழில் தன்னைக் காண வருவார் யாரென ஓர் இடையன் தனது மாடுகளை மேய்த்துக்கொண்டிருந்தான். பிரதாபனது கட்டளையை அப்பேதை மதிக்கவில்லை. பிரதாபன் அதுகண்டு, அவன் காலைக் கிழித்து அருகேயிருந்த மரத்தில் தொங்கவிடுமாறு ஏவலாளருக்கு ஆக்கினை தந்தான். அங்ஙனமே கண்ணிமைப் பொழுதில் ஏவலாளர் செய்து முடித்தனர்.

அந்நாளில் மொகலாய அரசவைக்குரிய ஆடம்பரப் பொருள்கள் பலவும் ஐரோப்பாவிலிருந்து கப்பலில்

வந்திறங்கி, சூரத் நகரிலிருந்து மேவார் வழியே டில்லிக்குச் செல்வது வழக்கம். அப்பொருளனைத்தையும் வழி மறித்துக் கொள்ளையிடும் வண்ணம் பிரதாபன் கட்டளையிட்டான்.

மொகலாயரது சேனை வெள்ளம் அரவல்லி மலைப் பிரதேசம் சேரும் வரையில் அதனை எதிர்க்காமல் வாளாவிருந்தான் பிரதாபன். பகைவரது சேனைகள் அப்பிரதேசத்தில் புகுந்து, எண்பது மைல் தூரம் பரவி அணி வகுத்து நின்றன. அங்கே எங்குப் பார்த்தாலும் அடர்ந்த காடுகளும் பள்ளத்தாக்குகளுமே அதிகம். பள்ளத்தாக்குகளின் இருபுறத்திலும் அந்தரமளாவிய பாறைகள் வரிசை வரிசையாக இருந்தன. பிரதாபனது போர் வீரரில் சிலர் அப்பாறைகளின் சரிவிலே மறைந்திருந்தனர். மலைநாட்டினரான வில்லர் என்பாரோ அம்பும் வில்லும் தாங்கி, மொகலாயரின்மீது உருட்டிவிடக் கனமான கற்களைச் சேகரித்துக்கொண்டு மலையின் உச்சியிலே பதுங்கி யிருந்தார்கள். பள்ளத்தாக்கின் முகத்துவாரத்திலே பிரதாபன் தனது வீரசிகாமணிகளுடன் ஸலீமின் வரவை எதிர்நோக்கி நிற்கலானான்.

முன்பின் அறியாத மலைப் பிரதேசத்தில் நின்று எங்ஙனம் போர்புரிவதென மொகலாய தளகர்த்தர் திகைக்கலாயினர். அப்பூமியின் இயற்கை யமைப்பை நன்குணர்ந்த மானசிம்மன் இல்லாதிருந்தால், ஸலீமும் அவன் தளகர்த்தரும் வந்தவழியே நோக்கிப் போயிருப்பர். அக்பரைவிட அதிக வயிரங் கொண்டிருந்த மானசிம்மன் ஸலீமுடன் வந்து, அம்முகத்துவாரம் சேர்ந்து, பிரதாபசிம்மனுடன் போர்புரியத் தொடங்கினான். மத்திய பதி வீரர் அதுகண்டு வரிசையாகச் சென்று மொகலாயரைத் தாக்கினர். மொகலாய வீரர் (புற்றீசல்போல்)

௩

பிரதாபன் ஸலிமை எதிர்த்தல்

கிளம்பி வந்து, மேவார் வீரரை முறியடிக்க முனைந்து முயன்றார்கள்.

இந்நாளிலே அரசரும் சரி, சேனபதிகளும சரி, போர்முனைக்கு வெகுதூரம் பின்னிருந்தே சமரை நடத்தி வருவர். முன்னாளில் அங்ஙனம் இல்லை. போர்முனையின் முன் வரிசையிலேயே வேந்தரும் படைத்தலைவரும் இருந்து, வீரருக்கு உற்சாகம் ஊட்டிச் சண்டையை நடத்துவர். அவ்விதமே பிரதாபன் தனது வீரருக்கு முன் வரிசையில் நின்று மொய்யமர் முறுக்கிவந்தான்.

ராஜா மானசிம்மன் அதுகண்டு, பிரதாபன்மீதே கண்கொண்டு, தனது படை வீரரை இறுமாப்புடன் ஏவினன். பிரதாபனை நோக்கிவந்த மொகலாயரிலே சிலர் வாள்வீச்சினல் ஆவியிழந்தனர்; சிலர் வேல்கம்பினல் சிரம் இழந்தனர்; சிலர் ஈட்டிக்குத்தினல் இடுப்பு முறிந்தனர். இங்ஙனம் மத்தியபதி வீரரும் வேந்தனும் பகைவரில் பலரைப் பலிகொண்டு படுகளத்தில் பெருமிதங் காட்டினர்கள்.

வாள்முனையில் ஆண்மை பார்க்கலாம் என்று அன்று வீரம் பேசிய பிரதாபன், மானசிம்மனையே குறிக்கொண்டு தன் வீரருடன் முன்னேறிச் சென்றான். மானசிம்மனும் பிரதாபனைப் பழிவாங்க வேண்டும் என்று கறுக்கொண்டு கிளம்பி வந்தான். பிரதாபனது உடைவாளோ மானசிம்மனது காயத்தில் படுகாயங்கள் உண்டு பண்ணியது. அக்காயங்களைக் கட்டிக்கொண்டு வருவான் வேண்டி மானசிம்மன் சிறிது பின்வாங்கிச் சென்றனன்.

புறங்காட்டிச் செல்லும் பகைவனைப் பின்தொடர மனமில்லாத பிரதாபன் அப்பால் ஸலீமை நோக்கிப் புறப்பட்டான். அதுகண்டு மொகலாய வீரர் அனைவரும் தம் அரசிளங்குமரனைக் காக்கக் கருதி, அவனைச் சூழ்ந்து

கொண்டனர். உடனே வாளாயுதங்கள் எங்கும் மின்னின; அம்புகளோ ஆகாயத்தில் பறந்தன; குத்தீட்டிகளோ எங்கும் மிளிர்ந்தன. கைகலந்த சண்டை நடக்கவே, ரணகளத்தில் சிரங்கள் வீழ்ந்து குவிந்தன; கவந்தங்கள் எழுந்து கூத்தாடின; இரத்த ஆறு பெருக்கெடுத்து ஓடிற்று. ஸலீமைச் சூழ்ந்து நின்ற பலரையும் பிரதாபனது வீரர் வெட்டிச் சாய்த்தனர். மேவார் வீரரிலும் பலர் வெட்டுண்டு வீழாமலில்லை.

மொகலாய இளவரசன் அதுசமயம் கவசம் பூண்ட யானையின்மீது அம்பாரியில் வீற்றிருந்தான். பிரதாபன் தனது அரிய நீலவேணிக் குதிரையைத் தட்டிக்கொடுத்தலும், அது தனது முன்னங்கால் இரண்டையும் யானையின்மீது வைத்துப் பிரதாபனை உயர்த்திக் கொடுத்தது. இதற்கிடையில் பிரதாபனது துணைவனொருவன் அக்கரிமாவின் பாகனை வீழ்த்தினான்; மற்றொருவன் முனைந்து வந்து அக்குஞ்சரத்தின் துதிக்கையைக் கணநேரத்தில் இருதுண்டாக்கினன்.

அவ்வேளை பிரதாபன் தனது நீண்ட வேல்கம்பு கொண்டு ஸலீமைக் குத்திக் குலைக்க முயலுகையில், அந்த இளவரசன் தன் தலையை அம்பாரிக்குள் இழுத்துக்கொள்ளவே, வேகமாக வந்த வேல்கம்பு அந்த அம்பாரியின் சிகரத்தைத் தகர்த்தெறிந்தது. கரமிழந்த யானையோ அடிதாங்கமாட்டாமல் உயிருக்கு அஞ்சிப் பிளிறிக்கொண்டே போர்முனையை விட்டு ஓடியொளியத் தலைப்பட்டது.

அந்தச் சமயத்தில் ராஜா மானசிம்மன், பிரதாபன் மீது மிருகேந்திரனைப்போல் கிளம்பிவந்தான். அவ்விதம் மானசிம்மன் வருவது கண்ட வில்லர் மலையுச்சியிலிருந்து கற்பாறைகளை உருட்டிவிட்டதுடன், ஓயாமல் சரமாரி

யும் பொழிந்தனர். அந்த அம்பு மழை கண்டு மொகலாயரிலே பலர் அஞ்சியோடினர்; சிலேரோ ஆவியிழந்தனர்; மற்றுஞ்சிலரோ பாறைகளின் கீழே அகப்பட்டுக் கொண்டு தத்தளித்தனர். மான சிம்மன்மீதும் பெரும் பாறையொன்று வந்து விழலாயிற்று. அதுசமயம் அசுவம் சாமர்த்தியமாக ஒதுங்கிக் கொடாதிருப்பின், மான சிம்மன் உயிரிழந்து உருண்டிருப்பான். இத்தகைய ஆபத்தைக் கண்டும் மானசிம்மன் மனம் கலங்கவில்லை. 'பிரதாபன் எங்கே? பிரதாபன் எங்கே? என்று வினவிக்கொண்டே அவன் முன்னேறி வந்தனன். மொகலாய வீரரும் உடன் சென்றனர்.

அக்கணமே கடும்போர் நிகழலாயிற்று. பிரதாபனது வீரரும் மானசிம்மனது துணைவரும் கைகலந்து மல்ல யுத்தம் செய்தனர். எங்கும் சிரங்கள் உருண்டன. வீரரின் கைகள் அறுந்தன, கால்கள் முறிபட்டன; குடல்கள் சரிந்தன; உடல்கள் சின்னபின்ன மாயின. பகைப்படையோ பிரதாபசிம்மனை நான்கு பக்கத்திலும் சூழ்ந்துகொண்டது. அப்போது பிரதாபன் ஈட்டிக் குத்தினால் மூன்றும், வாள் வீச்சினால் மூன்றும், துப்பாக்கி ரவையினால் ஒன்றுமாக ஏழிடங்களில் காயமுண்டனன். அவனது உடலிலிருந்து இரத்தம் பீறிட்டுக் கொட்டிக் கொண்டிருந்தது. அப்போதும் பிரதாபன் சிறிதும் தளரவில்லை. வீராவேசமும் மனவலியும் குற்றேவல்செய்து நிற்கையில், மனத்தளர்ச்சி தோன்றுமோ? வேலெறிபட்ட வேங்கைபோல் அவன் இன்னும் வீறு கொண்டனன்.

மேவார் மன்னவர் போரில் புகுங் காலத்தும், குடை கொடி சாமரம் முதலிய சின்னங்களுடன் செல்வர். அவ்விதமே பிரதாபன் சென்று போர் நிகழ்த்திய

தனுல், அவனிருக்குமிடம் வெகு தொலைவிலுள்ள பகைவருக்கும் நன்கு புலப்படலாயிற்று. ஆதலால் மொகலாயப் படையனைத்தும் அப்பிரதாபனையே வளைந்துகொண்டு சிறைசெய்யக் காத்து நின்றது. மானசிம்மனும் கணநேரத்தில் அக்கொற்றவனைச் சிறை செய்து பகை முடிக்கும் சிறப்பெய்தி விடலாமெனச் சித்தங் களித்து நின்ருன்.

அவ்வேளை மானவன் எனும் பாளையக்காரன் உடலினின்று உதிரம் ஒழுகும் பிரதாபனைக் காக்க ஒரு சூழ்ச்சி செய்தனன். மானவன் என்னும் மாண்புடையோன் உடனே பிரதாப சிம்மனது பின்பக்கம் சேர்ந்து, குடையும் கொடியும் தனக்குப் பிடிக்கும்படி பணியாளருக்குக் கட்டளையிட்டான். பணியாளரும் புத்திகூர்மை கொண்டு, மானவனது உட்கருத்தை உணர்ந்து அவ்விதமே செய்தனர். உடனே மானவன் அச்சின்னங்களுடன் மெதுவாகப் பிரதாபனை விட்டகன்று போர் புரிந்துகொண்டே மற்ருெரு முனைக்குப் போனுன். குடை கொடி சாமரம் முதலியன அகலவே, பிரதாபனும் அகலுகின்றனன் எனக்கருதிய மொகலாயர் அம்மானவனைச் சூழ்ந்து கொள்ளலாயினர்.

மெய்ப் பிரதாபனைச் சூழ்ந்து நின்ருேரும் அப்பொய்ப் பிரதாபனருகே போகத் தலைப்பட்டனர். ஆதலினுல் மானவனைச் சுற்றிக் கடும்போர் நடக்கலாயிற்று. பிரதாபனது பக்கத்திலே போரின் கடுமை சற்றே தணிந்தது.

பின்பு சிறிது நேரத்திற்கெல்லாம் மானவன், பகைவர் கையில் சிக்கி வெட்டுண்டு மாநிலத்தில் சாய்ந்தான். பிரதாபன் இறந்துபட்டனனெனச் சிலர் எண்ணி மகிழ்ந்தனர். தொலைவிலிருந்த பிரதாபனே தான் உயிர்

தப்பின விதத்தை யூகித்துணர்ந்து மானவனை வாழ்த்தி அம்மை பவானியைத் துதித்தவண்ணமாய் நின்ருன்.

அப்போது அவனது வீரர் இருபத்திரண்டாயிரவரில் பதினுன்காயிரம் பேர் போர்க்களத்தில் பொன்றிவிட, எண்ணுயிரவரே எஞ்சியிருந்தனர். அந்த எண்ணுயிரவரும் போரின் கடுமையால் நாலுபக்கம் சிதறுண்டு போகவே, பிரதாபன் மட்டும் தன்னந் தனியனுய் நிற்கலானுன். அதுகண்டு, இனி துணையில்லாது போரை நடத்த முடியாதென அவன் பரிமீதேறிப் பின்வாங்கிச் சென்ருன்.

உடனே பிரதாபன் போரில் பட்டான் எனும் சொல் மொகலாயரது சேனையிலே பரவத்தலைப்பட்டது; அது கேட்டு மானசிம்மன் உண்மை உணர முயலா நிற்கையில், தூரத்தில் தன்னந் தனியே தன் குதிரையின்மீது ஏறிச் செல்லும் பிரதாபனை ஸலீம் காணலானுன்; கண்டதும் அவனைப் பின்தொடர்ந்து மாய்த்து வருமாறு ஸலீம் ஆணைபோக்க, மொகலாய தளகர்த்தரிலே இருவர் பிரதாபனைத் துரத்தத் தொடங்கினர். படுகாயத்தினுல் உடலெங்கும் இரத்தம் வடிய அப்பிரதாபன் விரைந்து செல்லுகையில், அவன் ஏறிச்சென்ற குதிரையும் "இன்று அரசன் பிழைத்தான்" எனும் களிப்புடன் அவனைச் சுமந்து நாலுகால் பாய்ச்சலில் குன்றுகளையும் ஓடைகளையும் தாண்டிச் சென்றது.

பகைவர் இருவர் தொடர்ந்து வருவதை அறிந்ததும், நீலவேணிக் குதிரை வாயுவேகமாக ஓடுகையில் வழியிலே காட்டாறு ஒன்று குறுக்கிட்டது. இதற்குள் மொகலாய வீரர் இருவரும் பிரதாபனை நெருங்கிவிட்டனர். ஆற்றில் பெருவெள்ளம் போய்க்கொண்டிருந்தது. அதில் இறங்கி நீந்திப்போவதானுல் அதற்

குள் பகைவர் வந்து பிரதாபனை அண்டிவிடுவர். அது கண்ட பிரதாபன் தன் குதிரையைத் தட்டிவிட்டான். நீலவேணியும் நிலைமையை உணர்ந்து, ஆற்றின் அருகே யுள்ள பாறையின்மீது ஏறி. அக்கரையிலிருந்த மற்ெறாரு பாறையின்மீது ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து காட்டாற்றைத் தாண்டியது. ஆனால் அத்துரகம் உடனே தொப்பென்று கீழே வீழ்ந்தது.

குதிரை களைத்துப்போய் விட்டதெனப் பிரதாபன் கருதிக் கீழே இறங்கி அதனைத் தடவிக் கொடுத்தான். அப்போது, "நீலக்குதிரையில் ஏறிச் செல்லும் வீர! வந்தனம்! இனி உனக்கு ஆபத்து இல்லை. சற்றே நிற்பாயாக!" எனும் வாசகம் பிரதாபன் காதில் விழலாயிற்று. உடனே அம்மன்னவன் திரும்பிப் பார்க்கலானான்.

---

7. சோதர வாஞ்சை

பிரதாபனது தகப்பன் உதயனுக்கு இருபத்தைந்து புதல்வர் பிறந்தனர் என்று முன்பே கூறினோம். அம் மைந்தரில் முதல்வன் பெயர் சக்தசிம்மன். சக்தன் தனது தந்தையைவிட்டுப் பிரிவதில்லை. ஒருநாள் போர்க் கருவி செய்யும் கம்மியனொருவன் இருபக்கமும் மிகக்கூரிய முனை வாய்ந்த ஈட்டியொன்றைக் கொணர்ந்து உதயனது முன்னிலையில் வைத்தான். (யானையின் மத்தகத்தில் ஊடுருவிச் செல்லும் கோல், பஞ்சில் பாயாது என்பர்). ஆனால் இராஜபுத்திரரோ பஞ்சை இலேசாகப் பரப்பி, அதில் ஈட்டியைச் செருகிக் கூர்மையைப் பரீட்சை பார்ப்பர். அவ்வாறு அரசன் பரீட்சை பார்க்கவேண்டும்

என்றே கம்மியன் அந்த ஈட்டியைக் கொணர்ந்திருந்தான் உதயசிம்மனது அரசவைக்கு.

அதுசமயம் உதயசிம்மனது அருகே வீற்றிருந்த ஐந்து வயதும் நிரம்பப்பெருத சக்தன் தன் பிதாவை நோக்கி. "எந்தாய்! இஃது மானிடரின் உடலில் பாய்ச்சுவதற்கான கருவி அல்லவா? சதையினுள்ளே இஃது விரைந்து செல்லக் கூடுமாயினும், எலும்பினூடு பாயக் கூடியதோ? சோதித்துப் பார்க்க விரும்புகிறேன்," என்று கூறித் தனது மெல்லிய கைகளில் குத்திக்கொண்டான். ஈட்டி அச்சிறுவன் கரத்தில் ஊடுருவிச் சென்றதனுல்; இரத்தம் பீறிட்டுக்கொட்டத் தலைப்பட்டது. ஆயினும் சக்தனே சிறிதும் வருத்தம் காட்டவில்லை. அதுகண்டதும் உதயசிம்மனுக்கு அச்சம் உதித்துவிட்டது. கோழையான அக்காவலன் கலங்காமல் என்ன செய்வான்?

"இத்தகைய வீரப்புதல்வன் இருப்பின், நமக்கே அனர்த்தம் விளையும்," என்று அவன் அஞ்சினுன். மேலும், மத்தியபதியின் சாபத்தீடாகவே சக்தன் பிறந்துளான் என்று அந்நாள் சோதிடர் கூறியதையும் உதயன் எண்ணிப் பார்க்கலானுன். உடனே பார்த்திபன் அப்பாலனைத் தன் மைந்தன் எனவும் மதியாமல் கருணை என்பதும் இல்லாமல், அவனைக் கொன்றுபோடும் வண்ணம் கட்டளையிட்டனன். அங்ஙனமே கொலையாளர் சக்தசிம்மனைக் கொலைபுரிய அழைத்துச் சென்றனர்.

மேவாரின் பிரதான பாளையக்காரனுக்கு அவ்விஷயம் தெரியவந்தது. அவனே நெடுநாளாக அருந்தவம் கிடந்தும் பிள்ளைப்பேறு பெருதிருந்தனன். ஆதலின் அவன் காற்றினும் கடுகிச்சென்று கொற்றவனைக் குறுகி, "அரசே! எனக்குப் பிள்ளை இல்லை. அதனுல் என்

குலம் நசித்துப்போகுமென அஞ்சுகின்றேன். ஆதலின் சக்தனை எனக்குத் தந்து, என் கோரிக்கையை ஈடேற்ற வேண்டும்,'' என்று வேண்டிக்கொண்டான். அவ்வேண்டுகோளைப் புறக்கணிக்க உதயனுக்குத் துணிவு பிறக்கவில்லை. உதயன் இசையவே, சக்தனை அப்பாளையக்காரன் அழைத்துச்சென்று, தன் மைந்தனைப்போல் அவனை அன்புடன் வளர்த்து வந்தான்.

நாளடைவிலே அப்பாளையக்காரனுக்கு ஒரு புதல்வனும் பிறந்தனன். அவன் சந்திர வந்தர் எனும் அருங்குலத்தின் பெருந்தலைவன்; மேலும் மத்தியபதியின் பிரதம மந்திரியும் சேனாபதியும் ஆவான். அம்மூன்று பதவிகளும் பரம்பரையான உரிமைகளாகும். ஆதலால் அப்பதவிகளைத் தன் சொந்த மகனுக்கு வழங்குவதா, அல்லது சுவீகாரப் பிள்ளைக்கு அளிப்பதா என அவன் கலங்கி நிற்கலானான். இருதலைக்கொள்ளி எறும்புபோல் பாளையக்காரன் விழிப்பதை இளவரசன் பிரதாபன் அறியலானான்; உடனே தன் தமையனாகும் சக்தனை அரண்மனைக்கு வரவழைத்து உரியபதவியும் கொடுத்துப் போஷித்து வந்தான். சகோதரர் இருவரும் நகமும் சதையும்போல் இணைபிரியாது நேசமாக வாழ்ந்து வந்தனர். உண்ணும் காலையும் உறங்கும்போதும் உலாவும் வேளையிலும் அவ்விருவரும் ஒருவரை விட்டு ஒருவர் பிரிவதில்லை.

ஒரு நாள் இருவரும் வேட்டையாடக் கானகம் போயினர். அங்கு முள்ளம்பன்றி யொன்றைச் சுட்டு மாய்ப்பதில் இருவருக்கும் சற்றே பிணக்கு ஏற்படலாயிற்று. அப் பிணக்கு நாளுக்கு நாள் உள்ளூரக் கொழுந்து விட்டு வளர்ந்துவந்தது. மற்றொரு தினம் மாலையிலே இருவரும் குதிரை சவாரி போயினர்: அப்

போது பிரதாபன், சக்தனை நோக்கி, " மூத்தோய் ! வேல் கம்புகொண்டு போர்புரிவதில் நம்மிருவரிலே யாவர் வல்லவர் என்றறிய எனக்கு ஆசையுளது," என்ருன். சுத்த வீரனாகிய சக்தனும், " தம்பீ ! உன் கருத்து அஃதாயின், இப்போதே பரீட்சை பார்க்கலாம்," என்று பதில் தந்தனன்.

அவ்வளவில் இருவரும் வேல்கம்பைத் தாங்கிச் சிங்கநாதம் செய்யலாயினர். முதன் முதலில் வேல்கம்பை யார் வீசுவது என்று சிறிது நேரம் அவர்களுக்குள் வாக்குவாதம் நிகழ்ந்தது. இதற்குள் பக்திசாகரர் எனும் இராஜகுலப் புரோகிதர் அவ்விஷயத்தை அறியலானர். உடனே அவர் அவ்விடம் விரைந்து சென்று, "மைந்தர்காள் ! நீவிர் இருவரும் பகைத்தெழுந்து போர் புரிவதோ ? நம் இராஜ வமிசத்துக்கு அனர்த்தம் விளையுமே," என்று சொல்லி, அவ்விருவரையும் சாந்தப்படுத்த முயன்ருர். சினவாய்ப்பட்டுச் சீறிநிற்கும் இருவரும் வேதியரின் வார்த்தைக்குச் சிறிதும் செவிகொடாது, ஒருவரையொருவர் மூர்க்கமுடன் தாக்கத் தலைப்பட்டனர்.

பூசுரர் அதுகண்டு, " செல்வர்காள் ! அந்தோ, உங்களிடம் சோதர வாஞ்சை இல்லாது போயினது யார் செய்த பாபமோ ? வாலி சுக்ரீவர்களைப்போல் பகைகொண்டு வாழாமல், இராமலட்சுமணரைப்போல் நேசங்கொண்டு வாழ்தலன்ரே சிறப்பாகும் ? உங்களிலே ஒருவன் இளவரசன் ; மற்றவனே இராஜ மைந்தனாகிச் சேனபதிக்குச் சுவீகாரம் புகுந்தவன். நீவிர் இருவரும் சண்டை செய்யின், நாட்டிலே கட்சிப் பிரதிகட்சிகள் கிளம்பும் ; குட்டி குரைத்து நாயின் தலையில் வைப்பதுபோல், நீவிர் உம் தந்தையர்க்குத் தீங்கு விளைப்பீர்கள். அயலாரோ உங்கள் நிலைகண்டு கைகொட்டி நகைப்பர். அக்பர் சக்

கரவர்த்தியும் நமது நாட்டின்மீது படைகொண்டுவரக் காலம்பார்த் திருக்கின்றான். அதற்கு நீங்கள் இடங் கொடுப்பதா? உங்களை வேண்டிக்கொள்ளுகின்றேன். நாட்டின் நலத்தைப் பாருங்கள்," என்று கூறி இருவருக் கும் நடுவே நிற்கலானார்.

அப்போதும் வேல்கம்புகளின் வீச்சு நிற்கவில்லை. மறையவர் மனம் பொறாமல், "மக்காள்! நீங்கள் நெறி தவறிப் போர் புரிவதையும் யான் எங்ஙனம் கண்டு சகிப் பேன்? இராஜகுலமும் நந்திருநாடும் வாழவேண்டுமென என் மூதாதையர் முயன்று வந்தனர். யானும் அங்ங னமே முயலாநின்றேன். நீங்களோ என் சொல்லை உத றித் தள்ளி அரும்போர் விளைக்கின்றீர்கள். இனி எனக்கு வேறு வழி தோன்றவில்லை," என்று கூறி, ஈட்டி யொன்றை வாங்கி மார்பிலே பாய்ச்சிக்கொண்டு இருவ ருக்கும் இடையே தொப்பென்று நிலத்தில் சாய்ந்தார்.

மைந்தர் இருவரும் அதுகண்டு அச்சமும் துக்கமும் கொண்டு சமரை நிறுத்தினர். பின்னர் அவ்வந்தணர்க் குரிய ஈமக் கடன்கள் நிறைவேறின. உதயசிம்மனும் பிரதாபனும் புரோகிதரின் குடும்பத்தாரை யழைத்து, வேதியரின் வீழ்வுக்குத் தாங்கள் பெரிதும் வருந்துவதாக அறிவித்து, அன்னாருக்கு மானியம் தந்து ஆறுதலளிக்க முயன்றனர். அந்த வேதியரது சந்ததியார் இன்றும் அம்மானியத்தை ஆண்டு அனுபவித்து வருகின்றனர். பக்திசாகரர் விழுந்த இடத்திலே சிலையொன்று அடித்து வைக்கப்பட்டுள்ளது. மேவார் இராஜ குடும்பத்தினர் அச்சிலையைக்காணின், இன்றும் கையெடுத்துக் கும்பிடு வது வழக்கம்.

அப்பால் பிரதாபன் சக்தனை நோக்கி, "இனி நீ ஒரு கணமும் எனது அரண்மனையில் இருக்கவொண்

ணாது; இக்கணமே அகன்றுவிடவேண்டும்," என்று கனன்று கூறினன். சக்தன் அங்ஙனமே அரசவையைத் துறந்துபோயினன். பெற்ற தந்தையும், உடன் பிறந்தானும் தன்னைக் கைவிட்டது கண்டு, சக்தசிம்மன் கொண்ட சிந்தாகுலம் கூறுந்தரமன்று. எனினும், வாள் வலியும் தோள்வலியுங்கொண்டு வாழ்வெய்துவோம் என்று சக்தசிம்மன் துணிந்து ஒருவாறு ஆறுதல் கொண்டனன்.

சதுர்வித உபாயங்களையும் கையாண்டு மத்தியபதியை மடக்கவேண்டிக் காலங் கருதியிருந்த அக்பர் சக்கரவர்த்தியும் அஃதறிந்து சக்தசிம்மனை வரவழைத்து ஆதரிக்கலானான். அன்றுமுதல் மொகலாயரின் பக்கமிருந்த சக்தசிம்மன் தன் பழம் பகையை முடிக்கக் கருதிக் காலம் பார்த்திருந்தான். மொகலாய இளவரசன் போருக்கு எழுந்தவுடனே, பிரதாபனுக்கு வைரியாகக் கிளம்பி வந்தான் சக்தசிம்மன். போரிலே பிரதாப சிம்மனது வீரரில் எண்ணிறந்தோரைத் தன் வாளுக்கு இரையாக்கி அவன் ஓரளவு ஆறுதல் கொண்டான். பிரதாபனும் பலரை வெட்டிச் சாய்த்துப் பேராண்மை காட்டியது கண்டு, சக்தன் சுத்தவீரனேபோல் சிந்தை மகிழாமலில்லை. பல சமயங்களில் பிரதாபன் பேராபத்துக்கு ஆளாகித் தவித்தையும் அவன் கவனித்தனன்.

பிரதாபன் தன்னந் தனியே ஓடுவதையும் அவனைத் தொடர்ந்து சென்று ஆவி கவர இருவரை ஸலீம் விடுத்ததையும் சக்தன் நோக்கிய வளவில், தானும் பிரதாபனைத் தொடர்ந்து செல்லலானான். அக்பர் மைந்தன் அது கண்டு, "மூவரில் ஒருவரேனும் பிரதாபனை மாய்க்காமலிரார்," என்று களிப்பு மிகக் கொண்டனன். தானொன்றா விடினும் தன் சதை ஆடும் என்பதை ஸலீம் உணரவில்லை. மொகலாய தளகர்த்தரைத் தொடர்ந்து சென்ற சக்தன்

அவ்விருவரையும் தனது கூரியவாளுக்கு இரையாக்கி, முன்னே பாய்மாவின்மீது விரைந்து செல்லும் பிரதாபனை விளித்தான். "நீலக்குதிரைமேல் செல்லும் வீர! நில். இனி உன் உயிருக்கு ஆபத்து இல்லை," என்று கூவியழைத்தவன் இந்தச் சக்தனே.

---

8. உயிர்ப் பிச்சை

பின்பு, சக்தன், பிரதாபனை யணுகி, "தம்பீ! தம்பீ!" என்று கூவிக் கண்ணீர்விட்டுக் கதறி யழுதான். பிரதாபனோ ஒன்றும் தோன்றாது திகைத்து நிற்கலானான். அதன்பின் சக்தன், சோதர! எல்லாம் ஒரு நன்மைக்கே என்பர் பெரியோர். அங்ஙனமே நீ என்னை உன் அரண்மனையினின்று வெருட்டியதும் நன்மையாகவே முடிந்தது. அதனாலன்றோ இன்று யான் வந்து, உன் உயிரைக் காக்கும் பாக்கியம் பெற்றேன்," என்று கூறியதும், பிரதாபன் கண்ணீர் ஆறாய்ப்பெருக அண்ணனைத் தழுவிக்கொண்டு தேம்பித் தேம்பிப் புலம்பினான். பிரிந்தவர் கூடின் பேசவும் வேண்டுமோ?

நீலவேணிக் குதிரை மிகவும் களைத்துவிட்டது கண்ட பிரதாபன் அதன்மீதிருந்த சேணத்தைச் சக்தனது குதிரைமீது வைத்தளவில், "நம் அரசனுக்கு வேறு குதிரை கிட்டி விட்டது என்று நீலவேணி கருதித் தன் உயிரை விட்டது. அவ்விடத்திலே பிரதாபன் அதற்கென ஒரு சிலையை நாட்டி வைத்தான். அத்துரகம் பிரதாபனைத் தாங்கிப் போரில் புகுந்து காட்டிய தீரச் செயல்கள் அனைத்தும தலைநகரின் அரண்மனைச் சுவர்களில் வெகு அலங்காரமாக எழுதி வைக்கப்பட்டுள.

இரு சோதாரும் நெடுநேரம் உரையாடி யிருக்க இயலவில்லை. தம்பிக்கு உயிர்ப்பிச்சை யளித்துக் குதிரையும் கொடுத்துத் திரும்புகையில், "பிரதாப! சக்தன் இனி உன் ஆப்தர்களில் ஒருவன். மறுமுறை நீ அக்பருடன் போர் புரிகையில், அவன் உன்பக்கம் நின்று அருஞ்சமர் ஆற்றுவான். நீ வீரம் குன்றாது வாழ்க!" என்று சக்தன் சொல்லிப் போயினன்.

பிரதாபனை மாய்த்துவிட்டு இரு தளகர்த்தரும் சக்தனும் திரும்புவரென வழிமேல் விழிவைத்திருந்த ஸலீம், சக்தன் மட்டும் திரும்பி வருவதைக் கண்டனன். சக்தன் அது சமயம் தனது வெள்ளைக் குதிரையின்மீது வரவில்லை; முகம்மதிய தளகர்த்தன் ஒருவனது பரியின் மீதேறி வந்தான். அதுகண்டு, ஸலீமுக்கு ஐயமும் அச்சமும்தோன்றின. சக்தன் நெருங்கியதும் அவனை நோக்கி, "வீர! பிரதாபன் என்னாயினன்? நம் தளகர்த்தர் எங்கே?" என்று அம்மொகலாய இளவரசன் படபடப்புடன் வினவினான்.

அதற்குச் சக்தனே, "இளவரசே! தன்னந்தனியே ஓடும் பகைவனைத் துரத்திக் கொல்லுதல் வீரர்க்கு அழகாமோ? ஆண்மைதான் ஆகுமோ? யுத்த தர்மத்தை மறத்தலுங் கூடுமோ? பிரதாபனுக்கும் எனக்கும் பகையுண்டென்பது மெய்தான். ஆயினும் அவன் உயிருக்கு ஆபத்து நேருவதை எனது கண்கொண்டு காண யான் எங்ஙனம் சகிக்கமுடியும்? இயற்கையில் யாவருக்கும் அமைந்துள்ள சோதர வாஞ்சை என்னிடம் இல்லாது போமோ? என் சகோதரனைத் துரத்திச்சென்ற இரு தளகர்த்தரையும் யானே எனது வீரவாளுக்கு இரையாக்கினேன்; பிரதாபனது உயிரைக் காத்தேன்; அவனுக்கு என் பரியையும் பரிசாகக் கொடுத்து வந்தேன். இது

குற்றமாயின், என்னை ஏற்றவாறு தண்டித்திடுக," என்று கம்பீரமாகக் கூறினன்.

அது கேட்டதும் ஸலீமுக்கு உதடுகள் துடித்தன; நெற்றியில் புருவம் இரண்டும் ஏறின; நாசியிலிருந்து பெருமூச்சும் கிளம்பியது. அது கண்டு, சக்தனது கரமோ உடைவாள் இருக்குமிடம் செல்லலாயிற்று. உடனே அவ்வீரன், "இளவரசே! சௌரியமற்றவரிடம் சேவித்தல் மகா கடினம். உண்மையையே யான் உரைத்தேன். நீரோ உடன்பிறப்பின் இலக்கணம் அறியீர். உம்மிடம் இருந்து உழைக்க இனி உடன்படேன்," என்று கூறி, அக்கணமே மொகலாயரை விட்டகன்றான்; அகன்ற சக்தன், மேவார் மன்னவனைக் காணச் செல்லுகையில் காணிக்கையுடன் போகக் கருதி, மொகலாயரிடம் சிக்கிக் கிடந்த வைனசம் எனும் நகரை மீட்டு, பிரதாப சிம்மனை அடைந்து, "அரசே! வைனச நகரம் இனி உனது," என்று கூறிக் களித்தனன். பிரதாபன் அதுகேட்டு, அண்ணனது அன்பைக் கண்டு வியந்து, அப் பிரதேசத்தை அவனுக்கே அளித்தான். அன்று முதல் சக்த சிம்மனது புகழ் எங்கும் பரவியது.

அந்தச் சண்டையிலே, பிரதாபனது இருபத்தீராயிரம் வீரரில் எண்ணாயிரவரைத் தவிர ஏனையோர் வீர சுவர்க்கம் புகுந்துவிட்டனர். மேவாரின் வீர திலகங்களை அக் கடும்போர் பலிகொண்டதை எங்ஙனம் விரித்துரைப்பது? இராஜவமிசத்தைச் சேர்ந்த ஐந்நூற்றுவர் அருஞ் சமர் ஆற்றி அழியாப் புகழ் பெற்று மேலுலகம் போனார்கள். பாபர் சக்கரவர்த்தியினால் துரத்தப்பட்டு, மேவாரில் வந்து அடைக்கலம புகுந்திருந்த இராமசா எனும் குறுநிலமன்னவன் தனது நன்றியறிவைப் புலப்படுத்த வேண்டித் தனது இனத்தினர் முந்நூற்றைம்பது

பேருடன் களப்பலியானுன். பிரதாபனது உயிரைக் காக்கத் தனது உயிரை வழங்கிய மானவனது வமிசத்தினரிலே இருநூற்றுவர் இம் மண்ணுலகைத் துறந்து பேரியினர்.

அப்போரிலே ஒருவரையேனும் பறிகொடுக்காத வீர குடும்பம் மேவாரில் இல்லை. கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லையே என்று ஸலீம் வாட்டங் கொண்டான். எனினும் பகைவனைப் புறங் கண்டுவிட்டதைப் பிதாவிடம் பேசி மகிழலாம் எனும் கருத்துடன் அவன் டில்லி நோக்கிப் போயினன். பிரதாபன் இறக்கவு மில்லை, சிறைசெய்யப் படவுமில்லை என்பதைக் கேள்வியுற்ற அக்பர் சக்கரவர்த்தி, "அவ்வீரனை வெற்றிகொள்ளுதல் இலகுவன்று," என்று ஏங்கிக் கிடந்தான்.

---

9. பத்தும் பறக்கும்

அப்பால் 1577-ஆம் ஆண்டிலே ஸலீம் என்பான் மீண்டும் ஒரு பெருஞ்சேனையுடன் போருக்கு வந்தான். பிரதாபனும் அவன் வீரரும் போர்க்கோலம் பூண்டு, பகைப்படையைச் சந்தித்துச் சிறிதும் சலியாமல் சமர்செய்தனர். மூர்க்கமுடன் போர் முறுக்கிய மொகலாயரது சேனை வேசாறிப் போயிற்று. எனினும் அச் சேனையைப் பிரதாபன் புறங்காண முடியவில்லை. ஆக்ராவில் இருந்துகொண்டு அக்பர் துணைப்படைகளை மேன்மேலும் அனுப்பிக்கொண்டே இருந்தான். கார்கால மேகம்போல் திரண்டுவரும் சேனையைச் சமவெளியில் எதிர்த்து நிற்க இயலாத பிரதாபன், கும்பமேரு

எனும் கோட்டைக்குச் செல்லலானுன். மொகலாயப் படை வந்து அக் கோட்டையையும் சூழ்ந்துகொண்டு போர்புரிந்தது. அந்தக் கோட்டையைப் பிடிக்க ஸலீம் செய்த முயற்சி யனைத்தும் முதலில் பயன்படவில்லை.

பின்னர், அக் கோட்டைதனில் இருப்போருக்கு உணவுப் பொருள் போகும் வகையை மொகலாய இள வரசன் உய்த்துணர்ந்து, அதனை வழிமறித்துத் தடுத்து விட்டனன்; எண்ணிறந்த காசை வாரி வீசினன். பிரதாபனது தளகர்த்தரில் ஒருவன் காசாசையில் ஈடுபட்டு அக் கோட்டைக்குள்ளிருந்த நீர்நிலைக்கு விஷமூட்டிவிட்டான். உணவுப் பொருள் ஒருபக்கம் தட்டிவிட, மற்ருெரு பக்கம் நீர் வசதியும் நஞ்சுபட, பிரதாபன் அக் கோட்டையினைக் கைவிட்டுத் துணைவருடன் மற்ருெரு கோட்டை போய்ச் சேர்ந்தான்.

தன் காவலனுக்கு ஒரு விதத்தில் உதவிபுரிய நினைந்து, கும்பமேருவை இலகுவில் கைவிட மனமில்லாத பாணசிம்மன் தானும் தன் வீரரும் வெட்டுண்டு விழும் வரையில் மொகலாயரில் பலரைப் பலிகொண்டு அக் கோட்டையைக் காத்துநின்றனன். அப்பால், மொகலாயரது சேனை பிரதாபனிருக்குமிடம் அறிந்து, ஆங்குச் சென்று முற்றுகையிட்டது. பீரங்கிகள் குண்டு மழை பொழியவே, அக் கோட்டையின் சுவர்கள் தகர்ந்து பல பக்கங்களில் இடிந்து விழலாயின. உடனே பிரதாபன் சில துணைவருடன் வேருெரு கோட்டை சென்று தங்கலானுன்.

மேவாரின் பிரதான கவிஞனே. பிரதாபன் விட்டுப் போன கோட்டையின் தலைமைபூண்டு, தனது கவியினுலும் வசனத்தினுலும் உற்சாகம் ஊட்டினன். இராஜபுத்திர வீரர் ஆவேசங்கொண்டு, சமர் செய்தனர். வீரர்

களைத்துப் போகும் காலையில், முன்னோரின் வீரப் பிரதாபங்களை அக் கவிஞன் கைநெல்லிக்கனிபோல் எடுத்துரைப்பான். அதுகேட்டு வீரர் சினங்கொண்டெழுந்து பகைவன்மீது பாய்வர். அங்ஙனம் உற்சாகம் ஊட்டிவந்த கவிஞனும் அவன் துணைவரும் கொல்லப்பட்டுப் போன பின்னரே, அக் கோட்டைக்குள் மொகலாயர் புக முடிந்தது. இங்ஙனம் ஒன்றன்பின் ஒன்றாகப் பல நகரங்களை இழந்ததற்கும் மேவார் மன்னவன் வருந்தவில்லை. வீரருக்கு உற்சாகம் ஊட்டி வந்த கவிஞன் மாய்ந்தனன் என்று கேள்வியுற்றதும், பிரதாபன் தீயில் விழுந்த புழுவேபோல் துடித்தான். எனினும் மாண்டார் மீண்டு வாரார் என அப்பால் அவனுக்கு ஆறுதல் பிறந்தது.

பிரதாபனது சலியா ஊக்கத்தையும், அவன் வீரரின் இணையிலாப் போரையும் கேள்வியுற்ற அக்பர் அடங்காச் சினங்கொண்டு, மேவாரின் நகரங்கள் ஒன்றையும் விடாது கைப்பற்றுமாறு தன் மகனுக்கு ஆணை போக்கினான். அங்ஙனமே ராஜா மான சிம்மன் கிளம்பிச் சென்று, சில கோட்டைகளைக் கைப்பற்றினான். முகபத்கான் என்பான் கறுக்கொண்டு புறப்பட்டு உதயபுரியை வசஞ்செய்து வீறுகாட்டினன். மற்றொரு தளகர்த்தனே பிரதாபசிம்மனுக்கு வில்லர் அனுப்பி வந்த உணவுப் பொருள்களை வழிமறித்து நிறுத்தி வாகை கொண்டான். வேறொரு படைத் தலைவன் சென்று பல நகரங்களை நிர்மூலமாக்கினான். இவ்விதம் நாலாபக்கத்திலும் மொகலாயப் படைகள் பொங்கிப் பரந்து பெருமிதங் கொண்டும், இராஜபுத்திர வீரர் சமர் தொடுக்காமலில்லை. ஆயினும் பெருத்த படையின் முன்னே சிறு தொகையினர் சுத்தவீரராயினும் என்செய்வர்? மாற்று

ரைக் கண்டு மனோதிடம் குன்றாது மொய்ம்புடன் இராஜ புத்திரர் யுத்தம் புரிந்துவந்தனர். பிரதாபசிம்மன் எங்கே போய்த் தங்கினாலும், ஆங்கெல்லாம் மொகலாயரது சேனை தோன்றி அவனை எதிர்த்துப் போர் புரிந்து வந்தது.

நகரை விட்டு மலைக்குச் செல்லின், அங்கும் அக்பரது வீரர் பிரதாபனைச் சூழ்ந்துகொள்வர். மலையை விட்டு வனத்தை யணுகின், ஆங்கும் முகம்மதியப் படையினர் பிரதாபனை மடக்கப் பார்ப்பர். வனத்தைத் துறந்து ஒரு கோட்டையில் புகுந்தால், அக் கோட்டையைச் சுற்றி நாலு பக்கத்திலும் பகைவர் தோன்றிப் பிரதாபனை மல்லுக்கு இழுப்பர். இங்ஙனம் நிழலைப் போல் பகைப்படை பிரதாபனைத் தொடர்ந்து சென்று சமர்தொடுத்து வந்தது.

என்றாலும் வீரப் பிரதாபனாவது அவன் துணை வீரராவது சிறிதும் மனம் தளரவில்லை. ராஜா மான சிம்மனும் அக்பர் மகன் ஸலீமும் இருக்குமிடத்தை ஒற்றர் மூலம் பிரதாபன் உணர்ந்து, திடீரென்று அங்கே தோன்றி, அன்னாரைத் தாக்கிக் குலைத்துத் திரும்புவான். அது கண்டு அவ்விருவரும் சில சமயம் கதி கலங்குவர்; சில சமயம் பிரதாபனது சாமர்த்தியம் கண்டு வியப்பர்; இன்னும் சில சமயங்களிலோ அப் பிரதாபன்மீது வைரம் மிகக் கொள்வர். இவ்விதம் பிரதாபனும் மொகலாயரது சேனைக்கு மிகுதியும் திகில் ஊட்டி வந்தனன்.

ஒரு சமயம் கான்பரீத் என்பான் பிரதாபனை ஓரிடத்தே வளைத்துக்கொண்டான். சற்று நேரத்திற் கெல்லாம் பிரதாபனைச் சிறை செய்து விடலாமென அவன் மனப்பால் குடித்தது கொஞ்சமன்று. ஆனால்

சிறைசெய்யப் போகையில் பிரதாபனை அங்குக் காண வில்லை. அவ்விதம் மலைபோல் ஆபத்து நேர்ந்த பல சமயங்களிலும் பிரதாபன் தனது தந்திரத்தினால் தப்பிப் போனது கண்டு, மொகலாய தளகர்த்தர் திகைக்கலாயினர். பகைவனது பெருஞ் சேனையொன்று ஓரிடத்திலே அணிவகுத்து நிற்கையில், பிரதாபன் நள்ளிரவிலே திடீரென்று தோன்றி அச் சேனையைத் தாக்கி அவ்வளவு பெயரையும் கொன்று குவித்துத் திரும்பினான். அக்பரும் அவன் படைத்தலைவரும் அது கேட்டு, "அப்பப்ப! பிரதாபனைச் சிறை செய்தலோ, போரில் புறங்காணுதலோ இயலாத காரியம்," என்று ஏக்கம் கொண்டனர்.

மாரிகாலம் வரின் சண்டை சற்றே ஓயும்; வசந்தம் வந்ததும், போர் மும்முரமாக மூளும். இவ்விதம் இருபத்தைந்து வருஷகாலம் மொகலாயரது சேனை பிரதாபனுடன் போர்புரியாநின்றது. ஒவ்வொரு தடவையிலும் ஓரொரு நகரத்தை மொகலாயர் பிடித்துக்கொள்வர்; உடனே அந்த நகரைவிட்டு மற்றொரு நகருக்குப் பிரதாபன் செல்வான். மாலை வெய்யிலின் நிழல்போல் பிரதாபனது துர்ப்பாக்கியமும் வளர்ந்துவரலாயிற்று. தன்னைச் சிறை செய்யக் கருதி மொகலாயர் பெரு முயற்சி புரிதல் பற்றிப் பிரதாபன் சிறிதும் சிந்தை கலங்கியதில்லை. தன் மனைவி மக்களைச் சிறை செய்துவிடின் மானம்போய் விடுமே என்றுதான் அவன் பல சமயங்களில் பெரிதும் கலங்கினன்.

கூடுமான சமயங்களி லெல்லாம் பிரதாபன் தன் மனைவி மக்களை உடன் கூட்டிச் செல்வான்; கூடாத காலத்திலே மலைநாட்டினரான வில்லரின் பாதுகாப்பில் அவர்களை வைத்துப்போவான். சில நேரங்களிலே மேவார் ராஜகுடும்பம் பூமியின் கீழே சுரங்கத்தில்

மறைத்து வைக்கப்பட்டதுமுண்டு. பல சமயங்களிலே அவனது செல்வச் சிறுரும் சிறுமியரும் கிளிப்பிள்ளைகள் போல் கூண்டில் வைக்கப்பட்டு மரக்கிளைகளில் தொங்க விடப்பட்டிருந்தனர். வீரப் பிரதாபனது வயிற்றில் உதித்த மக்களுக்கு அக் கூடைகளே பொன்னூசல்களாய் விளங்கினபோலும். அக் குழந்தைகளைத் தொங்க விட்டிருந்த உறிகளும் முளைகளும் உதயபுரியின் அரண்மனையில இன்றும் வீரசின்னங்களாக விளங்குகின்றன.

அத்தகைய நிலைமை நேர்ந்தகாலத்திலும் பிரதாபன் இம்மியும் உள்ளம் ஒடுங்கியது கிடையாது. அக்காலங்களிலும் அரசுக்குரிய கம்பீரமும் தோற்றமும் அவனிடம் மிளிர்ந்து வளரலாயின. பாளையக்காரரும் அவ்வேளைகளில் கொம்பைவிட்டகலாக் கொடியேபோல் அருகிருந்து, அரசன் ஏவலை எதிர் நோக்கியிருப்பார்கள். இங்ஙனம் பல கஷ்ட நஷ்டங்களுக்கு ஆளான பிரதாபசிம்மன் எங்ஙன முளான் என்று பார்த்துவர வேவுகாரனொருவனை அக்பர் ஒருசமயம் அனுப்பினன். அப்போது தன் பாளையக்காரர் புடைசூழ வெறுந்தரையில் பிரதாபன் ராஜகம்பீரனாய் வீற்றிருப்பதையும், அவன் முகத்தில் வீரமாது விளங்கி நிற்பதையும், பாளையக்காரர் பரம பக்தி விசுவாசத்துடன் போற்றி வருவதையும், ஒற்றவன் உய்த்துணர்ந்து போய் உணர்த்தவே, அக்பர் அது கேட்டு உள்ளூர அதிசயித்தான். அக்பரது சிற்றரசாக விளங்கிய இராஜபுத்திர வேந்தரும் தம்மை யறியாமல் பிரதாப சிம்மனை மனமாரப் புகழ்ந்து பேசலாயினர்.

பிரதாபனது பான்மைகேட்டு, அக்பரின் பிரதம சிற்றரசான முகம்மதிய னொருவன், "என்னே! இம்மாநிலம் நிலையற்றது; சராசரங்களும் அழிந்துபோம்; மண்ணும் பொன்னும் நீடித்திரா; எல்லாம் முடிவில்

மறைந்தே தீரும். ஆனால் ஒருவனது புகழும் வீரமும் என்றும் குன்றாமல் நின்று நிலவும். மேவார் மன்னவனான பிரதாபசிம்மன் தனது பதியையும் நிதியையும் இழந்துமென்ன? தனது இயற்கை வீரத்தையும் தீரத்தையும் அப் புருஷசிங்கம் இழக்கவில்லை. ஆதலின் அவனது பூதவுடல் பொன்றினும், புகழுடம்பு பொன்றாது. ஹிந்து வேந்தரிலே, இராஜபுத்திரப் பார்த்திபரிலே, பிரதாபன் ஒருவனே குலப் பெருமை கெடாது விளங்குவோன் ஆவன்," என்று வாய்கொண்டமட்டும் போற்றிப் புகழ்ந்தான். ஆயினும் (மானம் குலம் கல்வி வண்மை அறிவுடைமை தானம் தவம் முயற்சி தாளாண்மை அபிமானம் முதலிய பத்தும் பசிவந்திடப் பறந்துபோம்) என்பர். அத்தகைய சமயத்திலும் பிரதாபன் நெஞ்சம் கரைந்ததில்லை; தனது உயிருககு உயிரான பட்டமகிஷி மலைக் குகையில் மறைந்திருந்த காலத்தும், ஒரு சமயம் பகைவன் கையில் சிக்கக்கூடிய ஆபத்து நேர்ந்த போழ்தும், இந்திர போகத்துடன் வாழவேண்டிய மக்கள் 'அப்பா! மெத்தவும் பசிக்குது' என்று அழுத காலத்தும், அவன் தனது இயற்கை மனவலியைக் கைவிட்டதில்லை.

நாடு நகரம் யாவும் இழந்த பிரதாபன் தன் மனைவி மக்களுடன் ஒருநாள் வனத்தே ஓரிடத்தில் தங்கிச் சமையல்செய்து சாப்பிட முயன்றான். ஒரு கவளம் எடுத்து வாயில் இட்டுக்கொள்ளும் தருணம், அக்பரின் சேனை அங்கு வந்துவிட்டது. உடனே அவன் தன் குடும்பத்தின் நலத்தை நாடி ஒரு கணநேரமும் தாமதியாமல் அவ்விடம்விட்டு ஓட நேர்ந்தது. மீண்டும் மற்றோரிடத்தில் தங்கிச் சமையல் பண்ணிச் சாப்பிடப்போகும் சமயத்தில் பகைவர் அங்குந் தோன்றிவிட்டனர். அக்கணமே அவ்விடம் விட்டகன்றான் பிரதாப சிம்மன். இவ்விதம்

ஒரு தினத்திலே ஐந்திடங்களில் தங்கி ஐந்துமுறை சமையல் செய்யவும், அன்னம் அருந்தப் போகும் தறுவாயில் கைக்கு எட்டிய உணவு வாய்க்கு எட்டாமல் அவ்வேந்தன் ஓட நேர்ந்தது. அச்சமயத்திலும் அம் மன்னவன் மனம் மறுகினானில்லை. கலங்கினான் இல்லை.

ஆனைக்கும் அடி சறுக்கும் என்பர். பெற்ற பதியும் படைத்த நிதியும் இழந்து ஒரு வனத்திலே பிரதாபன் தங்கியிருந்தனன். அப்போது பசிநோயைத் தணிக்க அக் குடும்பத்திற்கு எதுவும் கிடைக்கவில்லை. ஆதலின் அன்னவர் புல்லரிசியைப் பாகம் பண்ணிப் புசிக்கும்படி நேர்ந்தது; அவன் பிரிய மனைவியும் அரிய மருமகளும் அப்புல்லரிசியை அடையாகத் தட்டினார்கள். அந்த அடையினை ஆளுக்கு ஒன்றாகப் பிரதாபன் பகிர்ந்துகொடுத்தான். பாதி அடையினை மாலை யுணவினுக்கு வைத்துக்கொள்ளும்படி அவன் ஆணையிட்டான். மனைவியும் மக்களும் மகிழ்வுடன் அதனை உண்டு பசியாறினர். இங்ஙனமே சின்னாள் நடந்து வந்தது. ஒருநாள் பிரதாபன் அடையில் பாதியைப் புசித்த பின்பு, பசும்புல் தரையையே பஞ்சணையாக எண்ணி அதில் படுத்திருந்தான். மனைவியும் மருமகளும் அப்பால் ஓர் இடத்தில் உட்கார்ந்திருந்தனர். சிறு குழந்தைகள் பிரதாபன் பக்கத்தில் விளையாடி யிருந்தன.

அச்சமயம் பிரதாபன், "ஏகலிங்க மூர்த்தமே! அம்மை பவானியே! எவ்வளவு காலந்தான் மத்திய பதியை இக்கோலம் காணப் போகின்றீர்கள்? நாட்டு மக்கள் நலம் பெறுதல் எக்காலம்? யானும் என் மக்களும் வருந்துதல் ஒருபுறம் கிடக்கட்டும். இருபத்தைந்து வருஷ காலமாக மேவார் மக்கள் மானமே பூஷணமெனக் கொண்டு மங்கி மடிகின்றனர். அம்மையே! அப்பனைவிட

அன்னைக்கு அன்பு அதிகம் என்பரே! நீயும் ஏன் இன்னும் கடைக்கணிக்கவில்லை? யான் செய்த பிழைதான் என்ன? அக்பருக்குத் தலைவணங்க என் மனம் ஒருப்படவில்லை; மங்கை யொருத்தியை மனைவியாகக் கொடுக்கவும் அடியேன் இசையவில்லை. மரபின் மானத்தைக் காக்க எனது ஆருயிரையும் விடச் சம்மதமே. ஏனைய இராஜ புத்திர வேந்தர் தம் குலப் பெருமையைக் கவனியாமல் மொகலாயரை வணங்கி நிற்கின்றனர். அன்னாரின் மகிழ்ச்சியினும் எனது துக்கமும் கஷ்ட நஷ்டமுமே சால்புடையன. மத்தியபதி மக்களின் நலத்தைக் கருதி யேனும், அன்னாய்! நீ கடைக்கணியாயோ? உன் திரு விளையாடல் போதும் போதும்!" என்று தனது குல தெய்வத்தைக் குறித்துத் துதித்துக் கொண்டிருந்தனன்.

அவ்வேளை மூன்றே வயது நிரம்பிய பெண் குழந்தையொன்று வீறிட்டுக் கதறத் தொடங்கிற்று. உடனே பிரதாபசிம்மன் எழுந்து அக்குழந்தையை எடுத்து மார்போடணைத்துக்கொண்டு, "என் கண்ணே! கண்மணியே! ஏன் அழுகின்றாய்?" என்று அன்பும் பரிவும் கொண்டு வினவினான். அதற்கு அக்குழந்தை தனக் குரிய மழலைமொழியில், "அப்பா நீ சொல்லியபடியே அடையில் பாதியைப் புசித்தேன்; மறு பாதியை மாலை யில் உண்ண வைத்திருந்தேன். காட்டுப் பூனை யொன்று கடுகிவந்து அதனைக் கவ்விக்கொண்டு போய்விட்டது. மாலையில் புசிக்க என் செய்வேன்?" என்று கண்ணுங் கண்ணீருமாகப் புலம்பிற்று. பிரதாபன் மனம் (வெண் ணெய்க் குன்று எரியுற்றது போல்) நைந்துருகிவிட்டது. போரிலே தன் மைந்தரும் தோழரும் தன்னருகே வெட் டுண்டு வீழ்ந்தகாலத்தும், தான் தனியே நீலவேணியின் மீதேறி ஓட நேர்ந்தபோழ்தும், அவன் மனம் அசையா

திருந்தது. சமரில் சாதல் இராஜபுத்திரரின் இலக்கணம் என்றே அவ்வீரன் கருதியிருந்தான். மாலை யுணவைப் பூனை கவர்ந்து சென்றுவிட்டதே என்று கூறிப் பெண் குழந்தை கண்ணீர் பெருக்கியதைக் கண்டதும், வீரப் பிரதாபனது மனம் கலக்கமுற்றது. "மத்தியபதி மக்களும் பசிநோயால் அங்ஙனம் வருந்துவரே; இதற்கெல்லாம் நாமன்றோ காரணம்? இனி குடிமக்களின் நலத்தைக் கருதுவோம்," என்று கருதி, "எத்தனை நாளைக்கு இந்தத் தொல்லை?" என்று வினவி அக்பருக்கு ஒரு கடிதம் எழுதலானான்.

---

10. பிருதிவியின் பெருவாசகம்

பிரதாப சிம்மன் விடுத்த நிருபங்கண்டதும் அக்பர் சக்கரவர்த்தி கொம்புத்தேன் கிடைக்கப்பெற்ற முடவனேபோல் அளவிலா மகிழ் பூத்தனன். அக்கணமே, "வீரப் பிரதாபன் அடிபணிந்துவிட்டான்; ஆனதுபற்றி நகரெங்கும் கொண்டாட்டமும் களியாட்டமும் நடைபெறுமாக," என்று அம்மன்னவன் ஆணையிட, அங்ஙனமே பட்டினமெங்கும் பறை சாற்றப்பட்டது. அக்பரின் அரண்மனையும் அந்தப்புரமும் அளகாபுரிபோல் விளங்கலாயின. பல்லாயிரக் கணக்கில் பக்கிரிகளும் ஆண்டிகளும் பரமான்னமுண்டு ஆண்டவனைத் துதித்தனர். மாலையிலே அம்மன்னர் மன்னன் தனது சிற்றரசர் அனைவரையும் கொலுக்கூடத்திற்கு வரவழைத்து, "முனைந்து நின்றால் முடியாத காரியமும் உளதோ? இருபதாண்டுக்கு மேலாகப் போர்புரிந்து பார்த்தபின்,

வேறுவகை காணாது இன்று பிரதாபசிம்மன் வணங்கிவிட்டனன். அவ்வீரன் விடுத்துள்ள கடிதமும் இதோ என்று கூறிக் களித்தனன்.

பிரதாபனது பேராற்றலையும் மனோதிடத்தையும் நன்குணர்ந்த முகம்மதிய சிற்றரசரில் சிலர், 'பிரதாபனும் பணிவனோ?' என்று தம்மனத்தகத்தே ஐயப்பாடு கொண்டனர். இராஜபுத்திர வேந்தரிலும் வீரரிலும் சிலர், ஏதுமுரையாது முடிசாய்த்து நின்றனர். ஆங்கிருந்த பிருதிவிராய் என்பானோ, அச்சொல்கேட்டு இடியேறுண்ட நாகம்போல் கலங்கினன். வீராதி வீரனான பிருதிவிராய் விதியின்றி அக்பரின் அரசவையில் இருந்தனனேயன்றி வேறன்று. அவனது உடலம் மட்டும் அக்பரின் கொலு மண்டபத்தில் இருக்க, உயிரும் உணர்ச்சியுமோ பிரதாப சிம்மனிடமே குடிகொண்டிருந்தன. கற்றாரைக் கற்றாரே காமுறுவர் என்பதுபோல், சுத்த வீரனைச் சுத்தவீரனே போற்றிப் புகழ்வான். அங்ஙனமே இருபத்தைந் தாண்டுகளாகப் பிரதாபன் பேராற்றல் காட்டிக் கடும்போர் புரிவதைக் கண்டு பிருதிவியின் உள்ளம் பூரித்து நின்றது. பல சமயங்களிலே அவன் அக்பரை நோக்கி, "எங்கள் பிரதாபனைத் தலைவணங்கச் செய்ய ஒருவராலும் இயலாது," என்று கூசாமல் கூறிக் குதூகலிப்பான்.

ஆதலின் இராஜபுத்திர சமூகத்தையே பரிகசிப்பதுபோல் இன்று அக்பர் சக்கரவர்த்தி ஆனந்தங்கொண்டது கண்டு, பிருதிவியின் மனம் பெரிதும் இடருற்றது. உடனே அவன் அக்பரை நோக்கி, "மன்னர் மன்ன! இச்சபையிலுள்ளார் அனைவரிலும் யானே பிரதாபசிம்மனை நன்கறிவேன். உமது வல்லரசையும் வாழ்வையும் ஒருங்கே வழங்குவதாயினும் அவ்வீர வேந்தன் தலை

வணங்கான். அப்புருஷன் பணிவு காட்டி நிருபம் விடுத்திருக்கின்றனன் என்றீர். இதில் ஏதோ மாயம் இருத்தல் வேண்டும். பகைவர் யாரோ அவ்வெற்றி வீரனை வாள்முனையில் வெல்ல முடியாமல், எழுத்து முனையிலே வெல்லக்கருதிக் கள்ளக் கைச்சாத்திட்டு இக்கடிதம் வரைந்திருத்தல் வேண்டும். மேவார் மன்னவன் மன மொப்பி இந்நிருபம் வரைந்திரான். அவனுக்குக் கடிதமெழுதி இதன் உண்மையை உணர வேண்டுகின்றேன்," என்று சொல்லினன். அக்பர் சக்கரவர்த்தி அதற்குச் சம்மதிக்க, உடனே பிருதிவிராய் அரிய நிருபமொன்று வரைந்து அக்பரின் தூதன்மூலம் அதனை விடுத்தனன். உள்ளதை உள்ளவாறு உணரவே பிருதிவிராய் கடிதமெழுதியுள்ளான் என்று அக்பர் சக்கரவர்த்தியும் மற்றையோரும் கருதலாயினர். ஆனால் பிருதிவிராய் வரைந்த கடிதம் இது :—

"பாரத பூமியெங்கும் புகழும் பெருமையும் பரப்பிய மேவார் மன்னவன் மகாராணு வீரப் பிரதாபசிம்மனுக்கு அம்மை பவானியின் அருள் நோக்கும் ஏகலிங்க மூர்த்தியின் இன்னருளும் என்றும் நிரம்பிநிற்கும் வண்ணம் துதியா நிற்கும் பிருதிவிராய் பரம பணிவுடன் கூறும் வாசகம் யாதெனில்,—இந்துஸ்தானத்தின் இணையிலா வீர சிகாமணியே! வந்தனம்! ஹிந்துபதியே! உன்றன் புகழ் என்றும் நின்று நிலவுமாக! இமயம் முதல் குமரி வரையில் உள்ள பூப்பரப்பில் வசிக்கும் ஹிந்துக்கள் முன்னேபோல் சீரும் சிறப்புங்கொண்டு விளங்கவேண்டுமாயின், இவ்வேளை ஹிந்துவேந்த ரொருவனே முன்னின்று கைகொடுத்தல் வேண்டும். அவவிதம் மேவார் நாட்டின் மகிபனே தட்டாது கைகொடுப்பான் என்று ஹிந்து மக்கள் அனைவரும் நம்பி நிற்கின்றனர்.

"அங்ஙனமிருக்க மகாராணு வீரப்பிரதாபன் அம்மக்களைக் கைவிடவும் துணிவனோ? துணிந்துவிடின், நாட்டின் நலம் என்னும்? வெற்றிப் பிரதாபன் ஒருவன் இல்லையேல், ஹிந்துக்கள் அனைவரையும் அக்பர் சக்கரவர்த்தி ஒரேயடியாக எண்ணி அவமதித்தல் திண்ணம். இராஜபுத்திர வேந்தரில் பலரும் தம் பரம்பரையையும் வீரத்தையும் சுவாதீனத்தையும் இழந்து தரணியில் தத்தளிக்கின்றனர்.

இராஜபுத்திர மாதரோ தம் அரிய கற்புக்கலனைப் பறிகொடுத்துப் பரிதபிக்கின்றனர். மொகலாய மன்னவரோ சந்தையிலே சரக்குக்கொள்ளும் வர்த்தகரேபோல் பெரும்பொருளும் அரும்பதவியும் கொடுத்து நம்மவரை ஆசைவலையில் வீழ்த்திப் பரவசப்படுத்தி விடுகின்றனர். என்னே! என்னே! மாந்தர் இயற்கை!

"உதயன் மைந்தன் ஒருவன்மட்டும் இன்னும் விலை கொள்ளப்படவில்லை. பிரதாப மாணிக்கத்தின் விலையை மதிப்பிடவும் கூடுமோ? பிரதாபன், தான் பெற்ற பதியிழந்தான்; படைத்த நிதியிழந்தான்; பகரொணுப் பாடும் பட்டான்; இவையனைத்தும் மெய்யே. எனினும், தன் குலதர்மத்தை இடைவிடாது அவன் இன்றளவும் காத்துவந்தனன்; இங்ஙனமே என்றும் காத்துவருவான் என்றே என்போல்வார் எண்ணியுளர்.

"அந்தோ! பூபசிம்மனது சந்ததியில் வந்த பிரதாப சிம்மனுக்கும் இன்று மதி பிசகியதோ? விதிதான் விபரீதம் காண்கின்றதோ? நாடும் நகரும் நலமும் பலமும் இழந்து தவிக்கும் இணையிலாப் பிரதாபன் தனது குலமானத்தைக் காத்து வருதல் எவ்வுதவி கொண்டு என்றே உலகம் வியந்து நிற்கின்றது. தோள் வலியும் வாள் வலியுமே துணையாகக் கொண்ட ஒரு தீர

புருஷன், யாது நேரினும் தனது கண்ணியத்தைக் காவாது கைவிடுவனே?

"மானிடரை விலைகொள்ளும் டாநிதி படைத்த அக்பரும் ஒருநாள் இறந்துபடுவான். அவன் படைத்துள்ள பெருஞ்செல்வமும் ஒருதினம் மறைந்துபோம். அத்தகைய காலத்திலே நம்மவர் நலமும் பலமும் பெற, யாரை நோக்கி அண்ணுந்து நிற்பது? பிரதாப சிம்மத்தையன்றோ? போர்க்குலத்தின் மானத்தைப் பொன்றவிடாமல் பாதுகாத்துவரும் பிரதாபனே நம்மவருக்கு ஊன்றுகோல்போல் உதவக் கடமைப்பட்டவன். இராஜபுத்திரர் பலரும் கோடரிக் காம்புகளாகிவிட்டாலும், பிரதாபனேனுங் குலவிளக்காய்க் குலவுவானென நம்மவர் நம்பியுளர். பின்னர் நம் பிரதாபனது சித்தம்! நம்மவரின் பாக்கியம்! தேசத்தின் அதிருஷ்டம்.

இங்ஙனம்

ஏழை,

"பிருதிவி."

அக்பருக்குக் கடிதம் விடுத்த மறுகணமே, பிரதாப சிம்மன், "அந்தோ! இரண்டு பத்து ஆண்டுகளுக்கு மேலாக நமக்குக் குற்றேவல் செய்துநின்ற மனம், இன்று சிறிது பொழுதிற்குமுன் நம்மையே குற்றேவல் கொண்டுவிட்டதே; கானகத்திலே கந்தமூலங்களை யருந்தித் திரிந்துழன்ற காலத்திலும், காதல் மனைவியரையும் மக்களையும் கைவிட நேரின் என் செய்வதென ஏங்கிய காலத்திலும், பசிப்பிணியால் நாமும் நம் செல்வச் சிறுரும் பதைத்து நின்ற போழ்திலும், பகைவன்மீது வைரமேகொண்டு அவனுக்கு முடி சாய்ப்பதில்லை என்றிருந்த எனது இரும்பு நெஞ்சம் இவ்வேளை இளகிய

காரணம் காலத்தின் கோலமோ? ஊனமான ஊனிடை இருக்கு முயிரினைத் துறந்தும், ஒண்பூணுகும் மானமே புரப்ப தவனிமேல் எவர்க்கும் வரிசையும் தோற்றமும் மரபுமாகும். அங்ஙனமிருக்க, அந்தோ! அறிவிழந்து அக்பருக்குக் கடிதம் எழுதினேம். விடுத்த கடிதத்தை மீட்கும் வழியும் உளதோ? என்செய்வோம்?" என்று நெஞ்சம் புண்ணாகி நெடுந்தூரம் நினைந்திருந்தனன்.

அந்நிலையில் பிருதிவியின் பெருவாசக மமைந்த நிருபம் பிரதாபன் கையில் சேர்ந்தது. அதனை நோக்கலும், பிரதாபன் உடலம் கருகியது, உள்ளம் உருகியது, உள்ளீரல் பற்றியது, மானமெனும் பெருநெருப்பு அங்ஙனம் அவனை வாட்டா நிற்கையில், "இனி மேவார் நாடு நமக்குத் தேவையில்லை. அக்பரும் அதனை அனுபவிக்க முடியாவண்ணம் பாழ்படுத்திவிட்டோம். சித்தூரும் கணக்கற்ற இரத்த விழாக்களைக் கண்டு விட்டது. ஆதலின் சிந்து நதி பாயும் சீரிய பிரதேசம் புகுந்து, அங்கே நமது வலிகொண்டு அரசொன்று கண்டு, மொகலாய அரசைப் பழிவாங்கக் காலங்கருதி யிருப்போம்," என்றெண்ணிப் புறப்பட்டனன். ராஜபக்தியின் வடிவாக விளங்கிய பாளையக்காரரும் தம் பார்த்திபனைத் தொடர்ந்து செல்லலாயினர். நாடு நகரங்களைவிட்டு மலைகளில் வசித்துநின்ற மக்களில் பலரும், (இராமன் இருக்குமிடமே அயோத்தி என்பதுபோல்) பிரதாபன் இருக்குமிடமே மேவார் என்று கொண்டு, தங்கள் குழந்தை குட்டிகளுடன் தொடரத் தலைப்பட்டனர்.

அப்போது இராமசா எனும் சீமானொருவன் தோன்றிப் பிரதாபனது அடியிணைகளில் வீழ்ந்து, "அரசே! மேவாரைக் கைவிட்டுச் செல்வதும் பிரதாபனுக்குப் பிரதாபம் ஆகுமோ? சிந்து தீரத்தில் புதிய

வரசு கண்டு பகைமையை முடிக்க வழி தேடுவதினும், இவ்விருந்து பகைமையைப் புறங்காணப் பார்ப்பதே சாலச் சிறந்ததாம். இராஜபுத்திர குலத்தின் உயர்மானத்தை இங்கிருந்து காக்க முடியாவிடின், சிந்து நதி தீரமிருந்து காத்தல் கூடுமோ? மேவார் நாட்டிலே ஓர் ஆணோ பெண்ணோ உயிருடன் இருக்கும் வரையில் அக்பருடன் போர்புரிந்தாக வேண்டும். ஆதலின் மத்திய பதியை விட்டகல வேண்டாம். போரை நடத்துவதற்காக என்னிடம் உள்ள செல்வம் அனைத்தையும் இதோ தருகின்றேன்." என்று கூறித் தன்னிடமுள்ள பொருள் அனைத்தையும் கொடுத்து வேண்டிக்கொண்டனன். இராமாசா என்பான் ஈந்த திரவியமோ இருபத்தையாயிரம் போர் வீரருக்குப் பன்னிரண்டாண்டு ஊணும் உடையும் ஊதியமும் கொடுத்துப் போரை நடத்துவதற்குப் போதுமானதென்பர் இராஜபுத்திர சரித்திராசிரியர்.

பிரதாபன் தன் தாய் நாட்டைத் துறந்து செல்கின்றான் என்று கேட்டுப் பகைவர் பலர் பரமானந்தம் கொண்டு கிடந்தனர்.

---

11. மேவாரின் மீட்சி

இராமாசா எனும் சீமான் அளித்த செல்வமும் பிருதிவிராய் விடுத்த சீரிய நிருபமும் பிரதாபனுக்குப் புத்துயிரும் உணர்ச்சியும் ஊட்டின. உடனே அவ்வீர வேந்தனும் அவன் துணைவரும் சிங்கநாதஞ் செய்து கிளம்பினர். இருபதாண்டிலே அக்பர் கைப்பற்றிய மேவார் நகரங்களை ஓராண்டிலே மீட்டு மேன்மைபெற வேண்டுமென அனைவருக்கும் உறுதி பிறந்தது. அக்

கணமே யாவரும் தேவரம் எனும் கோட்டையை நோக்கிப் போயினர். அதன் காவலனான ஷாபாஸ் என்பானோ, பிரதாபன் பரதேசம் போய் விட்டனனெனப் பூரித்துக் கிடந்தான். அங்கிலையில் மேவார் வீரர் போர் முரசு கொட்டவே, ஷாபாஸ் உளம் கலங்கிப் பரபரப்புடன் போர்முனை சேர்ந்தான். புத்துயிர் பெற்றுப் போர்புரியும் ஐயாயிரம் இராஜபுத்திர வீரரை இருபதாயிரம் மொகலாயர் எதிர்த்து நிற்கக் கூடவில்லை. பகைப் படை முழுதும் மேவார் வீரரின் வாளுக் கிரையாயிற்று.

பின்னர் பிரதாபன் தனது துணைவருடன் அமயதம் எனும் கோட்டையை நண்ணி அதனைத் தாக்க, ஆங்கிருந்த மொகலாய வீரரும் விண்புகுந்தனர். அப்பால் கோமளமேரு எனும் புராதன நகரை நோக்கிச் சென்றான் பிரதாபன். அதனைக் காத்துநின்ற அப்துல்லா என்பான் அரிய போர் தொடுத்தும், பிரதாபனைப் புறங்காணாது படுகளத்திலே பட்டு வீழ்ந்தான். அவன் படையும் அந்தகனுக்குப் பெரு விருந்தாயிற்று. உடனே அக்கோட்டையும் பிரதாபன் வசமாக, அதனை மூலஸ்தானமாகக் கொண்டு மேவார் வீரர் நான்கு திசையும் நோக்கிச் சென்றனர். ஓராண்டினுக்குள் ஒன்றன்பின் ஒன்றாக முப்பத்திரண்டு கோட்டைகளும், நகரங்களும் பிரதாபனுக்கு வசப்பட்டன. சித்தூர், அஜமேரு, மண்டலகிரி எனும் மூன்று நகரங்களைத் தவிர்த்து, மத்தியபதி முழுவதையும் பிரதாபன் மீட்டுக்கொண்டான். அதுகண்டு மத்தியபதி வாசிகள் மட்டுமேயன்றி, பகைப் படையைச் சேர்ந்த சுத்த வீரரும் பிரதாபனது வீரச் செயலை வியந்து புகழ்ந்தனர்.

அங்ஙனம் பிரதாபன் தன் நாடனைத்தையும் மீட்டுக் கொண்டது கேட்டுத் தன் எண்ணம் மண்ணைக் கவ்விய

தென அக்பர் சக்கரவர்த்தி ஆழ்ந்துயர் கொண்டனன். ஆயினும் பிரதாபனது வீரமும் விடாப்பிடியும் தலை வணங்கா வாழ்வும் அக்பரின் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளாதிருக்குமோ? மேலும் பிருதிவிராய் போன்ற சிற்றரசரின் உணர்ச்சியும், தன் சேனையின் தளர்ச்சியும் அக்பருக்குத் தடை கல்லாய் நின்றன. தவிர, இராஜ புத்திர வீரசிங்கத்தை மேலும் வாட்டுவதாயின், ராஜா மானசிம்மன் போன்ற தளகர்த்தரின் மனம் விண்டு, குலாபிமானம் ஓங்கின், முதலுக்கே மோசம் நேருமென அச்சமும் ஒருபுறம் எழுந்தது. அன்றியும் சுத்தவீரனும் பிரதாபனை மறுபடியும் மல்லுக்கு இழுப்பதாயின், அனர்த்தம் நேருமென முதன் மந்திரியும் அக்பருக்கு அறிவூட்டினான். இக் காரணங்கள் அனைத்தையும் கொண்டே அச் சக்கரவர்த்தி சும்மா இருந்தனன் எனக் காண்கின்றது.

நாடனைத்தையும் மீட்டபின், ராஜா மானசிம்மனைப் பிரதாபன் மறந்துவிடவில்லை. மானசிம்மனது உதவி கொண்டே அக்பர் போருக்கு எழுந்தான் என்பதையும், அன்று அவன் வஞ்சினம் பேசிப் போனதையும் பிரதா பன் மதித்து, அம் மானசிம்மனுக்குச் சொந்தமான ஜய புரி நாட்டின்மீது தண்டு கொண்டு சென்றான். பிரதா பன் பழி வாங்க வருகின்றனன் எனக் கேள்வியுற்றதும், மக்களிலே பலரும் மதிமயங்கிக் கதிகலங்கி மூலைக்கு ஒருவராக ஓடி யொளியலாயினர். பிரதாபன் அது கண்டு கருணை கொண்டு, தன் சொல் வீண்போகா வண் ணம் மாலபுரம் எனும் பிரபல வர்த்தக நகரை மட்டும் மண்ணோடு மண்ணாக்கித் திரும்பினான். மக்களுக்கு யாதோர் இடையூறும் அவன் இழைக்கவில்லை.

அப்பால் சித்தூரை மீட்கவில்லையே என்னும் கவலையே பிரதாபனிடம் குடிகொண்டது. சித்தூரின் நிலையை நினைக்க நினைக்க அவனுக்குச் சீற்றமும் ஆவேசமும் உதிக்காநிற்கும். அடுத்த ஆண்டில் அவன் அதன் மீது படைகொண்டு செல்லக் கருதியிருந்தான்.

---

12. பிரதாபனது கடைநாள்

அக்காலத்தில் அக்பரின் அரசேபோல் உலகிலே வேறு எந்தத் தேசத்திலும் சிறந்த வலிமை கொண்ட அரசு இல்லை என்னலாம். அத்தகைய வல்லரசுடன் ஓர் இருபத்தைந்து வருஷகாலம் பிரதாபன் இடைவிடாமல் போர்புரிந்து வந்தான். அக்பர் சக்கரவர்த்தி படைத்திருந்த பலவகைப் பலத்தில் நூற்றில் ஒருபங்கு கூடப் பிரதாபனுக்கு இல்லை. ஆனால் மனவலி என்பது ஒன்று மட்டுமே பிரதாபனிடம் தலைசிறந்து நின்றது. அந்த ஒரேவலி கொண்டு ஓயாமல் அவன் போர்புரிந்து வந்த காலத்திலே, அவன் பட்ட புண் கொஞ்சமன்று. இராஜபுத்திர அரசுகள் எல்லாம் ஒன்றுகூடாமல் பிரிந்து நின்று, குலப் பெருமையைக் கைவிட்டு வாழத்தொடங்கியது கண்டு, பிரதாபன் மனம் பெரிதும் வருந்திற்று. அங்ஙனம் ஆற்றொணா அகப்புண்ணும் புறப்புண்ணும் சேர்ந்து வாட்டவே, அந்தோ! கொடுநோய்க்கு அக்கொற்றவன் ஆளாகினன். மருத்துவ வல்லாரை வரவழைத்து மகிமையான ஔஷதி ஊட்டிப் பார்த்தும் அக் கொடுநோய் சிறிதும் குணமுகம் கொள்ளவில்லை. ஆனதுபற்றி அத் தீரபுருஷன் அகால மரணத்துக்கு ஆளாக நேர்ந்தது.

சிறிது நேரத்திற்கெல்லாம் பிரதாபனது ஆவி அகலுமென உணர்ந்த அவன் துணைவர் அனைவரும் தம் மன்னவனைச் சூழ்ந்திருந்து சிந்தை கலங்கினர். அரை நாழிகையில் ஆவி பிரிந்து போமெனச் சோதிடனும் நிமித்திகனும் கூறவே, ஈமக்கிரியைக்கு உரிய ஏற்பாடுகள் நடக்கலாயின. ஐந்து நாழிகை ஆகியும் அவனது உயிர் உடலைவிட்டு ஓடாமல் தொண்டைக் குழியில் தத்தளித்துக் கொண்டிருந்தது. அதுகண்டு ஈதென்ன புதுமை என்று பலரும் திகைத்தனர்.

பாளையக்காரரில் முதல்வன், “அரசே! சிற்றுளி பெருமலையை எதிர்த்து நின்றதுபோல் மொகலாய வல்லரசை நாம் இத்துணை காலம் எதிர்த்து நின்று யாவரும் புகழச் சமர் முறுக்கினோம்; மத்தியபதியின் பெரும் பாகத்தையும் மீட்டு மேன்மை கொண்டோம். அக்பரும் அது கண்டு அதிசயமும் ஆனந்தமும் கொண்டதாக ஒற்றர் உரைக்கின்றனர். சித்தூரை மீட்கச் சிந்தை கொண்டதும், நோய் வந்து குறுக்கிட்டுவிட்டது. எனினும் நாங்கள் உயிருடன் இருக்கும் வரையில் அப் பழம் பதியை மீட்க முயன்று நிற்போம். ஆதலின் தாங்கள் சாந்தியுடன் ஏகலிங்க மூர்த்தியின் பாதம் சேரலாம். அன்று மலர்ந்த தாமரை மலர்போல் என்றும் துலங்கும் தங்கள் முகம் இன்று வாட்டங்கொண்டு கிடக்கக் காரணம் யாது? தங்கள் மனத்தை ஏதேனும் வருத்தி நிற்கின்றதோ? அதனை அடியேன் அறியலாகுமோ? அது யாதாயினும் அதை நிறைவேற்றி வைக்க யான் காத்து நிற்கின்றேன்?” என்று அன்பு ததும்பக் கூறினன்.

வீரப் பிரதாபன் அதுகேட்டு, “எனது அருமைத் துணைவ! என் மனக் கலக்கத்தை என்னென்று எடுத்

துரைப்பேன்? நமது நாடு மீண்டும் மொகலாயரின் வசப் படுமோ என்பதே எனது கவலை.

"சில ஆண்டுகளுக்குமுன் நாமனைவரும் புஷ்கரம் எனும் ஏரிக்கரையிலே குடிசையில் தங்கி வாழ்ந்தோம் அல்லவா? அக் குடிசை மிகவும் தாழ்ந்திருந்தது. இள வரசான அமரன் அக் குடிசைக்குள் புக முயன்றான். நீண்டுநின்ற கூரையின் குச்சொன்று அவன் தலைப்பாகை யில் பாயவே, அது கிழிந்துபோயிற்று. அதுகண்ட அமரன், "இராஜகுமரன் வசிக்கத் தகுந்த இடம் இஃதோ? வானமளாவும் மாடம் வாய்ந்த மாளிகையி லன்றோ நாம் வசிக்கவேண்டும்?" என்று முணுமுணுத்த னன். அக்பருடன் நாம் அரும்போர் செய்து நிற்பதை யும், நமது ஆருயிர் ஆபத்துக்கு உள்ளாகிக் கிடப்பதை யும் அக் குமரன் கூர்ந்து அறிந்தானில்லை. அத்தகைய மைந்தனன்றோ எனக்குப் பின் இனி மன்னவனாக முடி சூடப்போகின்றான்? சுக போகங்களை விடுத்து, அவன் விடாது போர் தொடுத்துச் சித்தூரை மீட்பானோ?

"நம் குலப் பகைவனோ எளியவன் அல்லன்; அவ னிடம் பலவகை வலியும் நிரம்பியுளது. காலங் கருதியே அவன் வாளாவிருக்கின்றான். அவன் தவறினும் அவ னது சந்ததியார் மத்தியபதியைச் சும்மாவிடார். சுக போக போக்கியங்களுடன் வாழ விரும்பும் எனது புதல் வனோ அப் பெரும்பகையை எதிர்க்க இயலும்? அரி யணையில் அமர்ந்ததும், அமரன் அழகிய மாளிகைகள் நிருமிப்பான்; மாளிகை நிருமித்ததும், கேளிக்கைகளில் அவன் சிந்தை பாயும். பின்னர் மத்தியபதியின் மகிமை யும் மானமும் என்னும்?

"மேவாரின் மானத்தைக் காக்க நாம் இந்நாள் காறும் எத்துணையோ இரத்தஞ் சிந்தினோம்; இயம்

பொருளும் பாடும்பட்டோம்; இத்தனையும் அமரசிம்மனால் வீணாகிவிடின் அது நம் குலத்திற்கே கேடன்றோ? இஃதே என் மனத்தைப் பெரிதும் வாட்டுகின்றது. இது கருதியே என் உயிரும் அகலத் தயங்குகின்றது," என்று மிகவும் தீனமான குரலில் எடுத்தோதினன்.

பிரதம பாளையக்காரன், "பேரரசே! சிறிதும் தாங்கள் கலங்கவேண்டாம்; யானும் ஏனைய பாளையக் காரரும் உயிர் தாங்கி நிற்குமளவும், மேவாரின் மானம் சிதறாது பார்ப்போம். மேலும் தாங்கள் விரும்பும் வண்ணம் மேவார் நன்னிலை எய்தும் வரையில், அக் குடிசைகளே அரசனது அரண்மனைகளாக விளங்கும்," என்று உறுதி கூறினான். பின்னரே பிரதாபன் ஆவி, அம்மை பவானியின் பாதம் புகுந்தது.

என்னே! ஆவி பிரியுங் காலத்திலும் வீரப் பிரதாபன் தன் தேச நலத்திலேயே கருத்துக்கொண்டிருந்தனன்! அஃதன்றோ தேசாபிமானம் வாய்ந்த வீர புருஷன் இலட்சணம்!

Printed at the Liberty Press, G. T. Madras